உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மங்கையர்க்கரசியார் பிள்ளைத் தமிழ்.

---

ஆசிரியர்:

வித்வான். கோவை.

கு. நடேச கவுண்டர் P. O. L.

தலைமைத்தமிழாசிரியர்,

முனிசிபல் ஹைஸ்கூல், கோயமுத்தூர்.

கோயமுத்தூர் ஸ்டார் பவர் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

பதிப்புரிமை ஆசிரியர்க்கே.

1941. விலை அணா 6.

0-,15NNG4;M
N41
164042

26
B-3.
103

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மங்கையர்க்கரசியார் பிள்ளைத் தமிழ்.

ஆசிரியர்:

வித்வான். கோவை.

கு. நடேச கவுண்டர் P. O. L.

தலைமைத்தமிழாசிரியர்,

முனிசிபல் ஹைஸ்கூல், கோயமுத்தூர்.

5854

கோயமுத்தூர் ஸ்டார் பவர் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

பதிப்புரிமை ஆசிரியர்க்கே.

1941. விலை அணா 6.

# முகவுரை.

ஆனைமுக னாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.

தென்னிந்தியாவில் சைவ உலகிற்புகழ்பெற்ற பெண் மணிகள் மூவரில் ஒருவராகிய மங்கையர்க்கரசியம்மையார் தாம் பிறந்த குலமும் புகுந்த குலமும் போற்றும் வண்ணம் பெயர்பெற்ற வீரபத்தினியாவர். இவரது கணவனார் கூன்பாண்டியராய நின்றசீர்நெடுமாறனாரும், அவருடைய அமைச்சர் குலச்சிறையாரும் அறுபான் மும்மை நாயன்மார் வரிசைகளில் சேர்த்து எண்ணப்படுவதற்குக் காரணமாயிருந் தவர் பெருந்தகைமையுடைய அவ்வம்மையாரே ஆவர்.

சில நாட்களுக்கு முன் நான் தமிழ் நூல்களைக் கற்க ஆரம்பித்த காலத்தில், தன்னிடமிருந்த இப்பிள்ளைத்தமிழ் நூலைக்குறித்ததோடு, பின் படித்துப் பார்க்கவும் ஆசிரியர் அதைத்தந்தார்கள். அதனைப் படித்துப்பார்த்து மகிழ்ந்ததின் பயனாகவே இந்நூல் வெளிவரலாயிற்று எனில் அது மிகை யாகாது. "யான் பெற்றவின்பம் பெறுக விவ்வையகம்" என்பது சான்றோர் வாக்கன்றோ!

இந்நூலிலுள்ள சொல் நயங்களும், பொருள் நயங் களும், மற்று இசையின்பங்களும் ஆகிய எல்லா நயங்களும் தெளிவாக இந்நூலாசிரியருக்கு இயற்றமிழ் ஆசிரியராயிருந்த திருவாளர் பண்டிதர் சி. எஸ். சோக்கலிங்கம் பிள்ளை அவர்களால் முன்னுரையில் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலியற்றிய வித்வான், திரு. கு. நடேசக் கவுண்டர் அவர்கள் திருவருட்டுணையால் நீடூழி வாழ்வாராக!

இரத்தினசபா
பதிபுரம்,
கோயமுத்தூர்,
6—10—41.

S. R. வேங்கடகிருஷ்ண முதலியார்.

# முன்னுரை.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழலெம்மாற் போற்ற லாமே.

[பெரிய புராணம்]

சிற்றிலக்கிய வரிசையிற் சேர்ந்த இச்சீரிய நூலை ஆக்கிய ஆசிரியர் இதற்கோர் முன்னுரை எழுதுமாறு என்னைத் தூண்டினர். அவர் அவ்வாறு தூண்டியமைக்கு அவர் என்பால் பூண்டுள்ள அன்பே காரணம். இவ்வரிய பணியை ஆற்றற்குரிய தகுதி பெரிதும் உடையார் பலருளா கவும் என்னைத் தூண்டியதற்கு வேறு காரணமுமுண்டு கொல்? அன்பினால் மீதூரப் பெற்ற யானும் இப்பணியாற் றற் கொருவாறு மனமிசைந்தேன்.

இந்நூல் மங்கையர்க் கரசியார் பிள்ளைத்தமிழென்பது. இது பழங்குடியாகிய சோழர் குடியிற் பிறந்து பாண்டியர் குடியிற் புகுந்து பாண்டிய நாட்டில் வழி வழி வழங்கிச் சமணாதிக்கத்தால் தன்னிலையின் வழுவி வீழவிருந்த

சைவத்தை மேன்மேலுயர்த்து நிறுத்த தனிப்பெருமை வாய்ந்த பாண்டி மாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டியற்றப்பெற்றது. பாண்டிமா தேவியாரைப் பிள்ளைமைப் பருவத்தில் வைத்துப் பாராட்டுவது. அத்தேவியாரது செயற்கருஞ் செய்கையைப் பலபடியாகச் சிறப்பித்துக் கூறுவது. அங்ஙனம் கூறு முகத்தான் சைவத்தின் பெருமையையும், திருமுறைகளி னருமையையும் மெய்கண்ட நூல்களினத்துவிதவுண்மை யையும் விளக்கிச் சொல்வது. செந்தமிழின் இனிமைப் பண்பை எடுத்துக்காட்டுவது.

பிள்ளைத்தமிழ் என்பது ஆண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் இருவகைப்படும். அவற்றுள் பெண்பாற் பிள்ளைக்கவியாகிய இதில் "காப்பொடு செங்கீரை தால் சப்பாணி, யாப்புறுமுத்தம் வருக வென்றன் முதல், அம்புலி" யோடு அம்மானை ஊசல், நீராடல் மூன் றுங் கூட்டிப் பத்துப் பருவங்கள் உள்ளன. இப்பிரபந்தத் திற் பயின்றுவரும் செய்யுள்கள் ஆசிரியப் பாவினத்தைச் சேர்ந்தவை. சந்தம் பயிலும் பாக்களும் பலஉள.

பிள்ளைக்கவி போன்ற சிறு காப்பியங்களில் ஆசிரியரின் கற்பனைத்திறன் புலனாகும். அங்ஙனம் புலப்படுங் கற்பனை கள் இந்நூலில் ஆங்காங்குக் காணலாகும். மற்றும் அணி நலங்களும், சொன்னயங்களும், ஏற்ற பெற்றி எடுத்துக் காட்டும் உதாரணங்களும் இதைச் சிறப்பிக்கும். இன்னோ ரன்ன பண்புகளே கற்பவர் நெஞ்சைக் காமுறுக்கும் தகை மையன. ஆகலின் அத்தகைய சிறப்புகளுள் ஒரு சிலவே னும் இம்முகவுரையிற்றந்து காட்டுதல் இயைபுடைத்தாம் எனக் கருதுகின்றேன்.

சீகாழியிற் றோன்றிய சிவஞானச் செல்வராகிய திரு ஞான சம்பந்தரது பெருந்துணைகொண்டு பாண்டிய நாட்டில் பரவிய சமணவிருளை, மங்கையர்க்கரசியார் ஓட்டினாராதலின் அந்த ஞான சம்பந்தரது பிரபாவம் இந்நூலில் பல படியாக எடுத்துப் பாராட்டிக் கூறியிருக்குந் தன்மை படித்து இன் புறத்தக்கது. "ஞான சம்பந்த சிவ சூரியன்", "சிரபுரம் வருகவுணியமணி", "புகலியர் தவப் பெரும் புணரியிலுதித்த ஞானபோனகப் பரிதி", "அருகாசனி", "புகலிவரு தமிழ் விரகர்", "குமுத மலர் வாய்ப் பிரமபுரக் குருந்து" என்பன போன்ற சொற்றொடர்களைக் காண்க.

"பானற் கருங்கட்டிருவினோடு பானற் கடலிற்றுயில் முகில் என்னும்", "இச்சக மீதிலிருந்துந் தெளியா ரிச்ச கமே பேசி" என்றும் "எமக்குன்னஞ் சரண நெஞ் சரணமே" என்றும் 'வண்டுபடு தண்டுளப மாலையணி மாலை மிகுமாலை யுடையானென்னவே" என்றும் வரும் சொல்லமைதிகள் இன்புறத்தக்கன. சிலேடை நயம்படக் கூறிய பாக்களுமுள. நீராடற் பருவத்தில் வைகை நதியை இறைவன், உமா பிராட்டியார், குமரக்கடவுள், கணபதி முதலியவர்கட் கொப்பித்துக் கூறிய நயம் போற்றத்தக்கது. தொடையமைதிகள் இல்லாத ஒன்றைச் செந்தொடை என்று கூறுமாறு போலப் பொருளமைதியில்லாத "ங்கா ங்கா" என்று எழு பச்சிளங் குழந்தைகளின் வாயொலி யைக் குறிக்கும் "சொல்" என்று பொருள் தரும் "கீர்" என்னும் சொல் இலக்கியங்களில் 'செங்கீர்' (செங்கீரை) எனச் செம்மை என்னும் அடையொடு வழங்கும். ஆனால் 'செங்கீரையாடுக' என்னும் சொற்றொடர் குழந்தைகள் பால் இயல் பினமைந்த ஓராடற் சிறப்பைக் குறிக்கவே நூல் களில் பயின்று வருகின்றது. ஆதலின் இவ்வாசிரியரும்

செங்கீரைப் பருவத்துப் பாடலில் (12) "வண்டலையவிதழ்கள் விரி புண்டரிக மலரனைய மணியாழி யங்கை விரல்கள், மண்மீ துறப்பதித் தொரு முழந்தாளூன்றி மற்றையொரு தாணிமிர்த்து..............செங்கீரை யாடியருளே" என்று கூறியுள்ளார். "ஒருதாளூந்தி யெழுந்திரு கையு மொருங்கு பதித்து நிமிர்ந்தருள் பொழிதிரு முகமசைய வசைந்தினிதாடுக செங்கீரை" என்றார் குமரகுருபர அடிகளும்.

முத்தம் என்ற சொல் முத்தையும் குறிக்கும். முத்துக்கள் இருபது இடங்களிற் பிறக்கும் என்பர். ஆதலினால் புலவர்கள் முத்தப் பருவத்தில் "பிறவிடங்களில் கிடைக்கும் முத்துக்களைக் காட்டிலும் நின் வாயிற் பிறக்கும் முத்தமே சாலச் சிறந்தது; அதனையெமக்குத் தருக" என்று குழந்தையைக் கேட்பது போலச் செய்யுள் செய்வது வழக்கம். அதனையொட்டி இந்நூலாசிரியரும் கூறுகின்றார். பிற முத்தங்களைத் தாம் வேண்டாமைக்கு சமற்காரந் தோன்ற காரணம் கற்பித்துக் காட்டியிருப்பது படித்தின்புறத்தக்கது. (51)

"பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம்" என்றனர் தமிழ் மூதாட்டியார். பாட்டுடைத் தலைவியாகிய குழந்தையுடன் விளையாட வருமாறு தாயரும் பிறரும் அம்புலியை (சந்திரனை) அழைப்பார். அங்ஙனம் அழைக்குங்கால் சாம பேத தான தண்ட முறைகள் தோன்ற அழைக்கவேண்டுமென்பதை நியதியாகக் கூறுவர். அதாவது, பாட்டுடைத் தலைவியோடு அம்புலிக்கு ஒற்றுமை கூறியழைத்தல், வேற்றுமை கூறி யழைத்தல், அப்புலி விளையாட வரின் அதற்குண்டாகும் நன்மை கூறியழைத்தல், வாராவிடின் அதற்கு விளையும் தீமையைக் கூறியழைத்தல். எனவே இந்நியதி பொருந்தச் செய்யுள் செய்தலின் அருமை தோன்ற எழுந்

தது முன்னர் காட்டிய தமிழ் மூதாட்டியாரது மூதுரை. இந்நூலின் அம்புலிப்பருவத்துச் செய்யுள்கள் இம்முறையை ஒட்டியே சிலேஷோக்தியாக இயற்றப் பெற்றுள்ளன. இதனால் ஆசிரியாது எளிதிற் கவனம் செய்யும் திறம் தெளிவாகும்.

இங்ஙனம் பருவந்தோறு மமைந்துள்ள செய்யுள்களின் நயங்களை ஆய்வான்புகின் முன்னுரை வரம்பின்றி ஓடுமாகலின் இதனை இவ்வளவில் நிறுத்துகின்றேன்.

இனிப் பிறிதொரு வழியில் இந்நூலாசிரியர் தமது புலமைத் திறத்தைக் காட்டியிருப்பதற்கு இரண்டொரு சான்று கூறலாம் என நினைக்கின்றேன். இலக்கண இலக்கியங்களிற் பயிற்சி மிகவுடையர் இவ்வாசிரியர் என்பது மேலைய கூற்றுக்களாற் புலனும். மெய்கண்ட நூல்களினும் தமக்குள்ள பழக்கத்தையும் ஆங்காங்கு காட்டிச் செல்லுகின்றனர். பரசமய வாதிகளைக் கண்டுதாம் அஞ்சுவதாகவும் அவ்வச்சத்தைப் பாட்டுடைத் தலைவியின் ஆதாவிற் போக்கிக்கொள்வான். அபயங் கூறி அவர் தம்மைக்காக்க வேண்டுகின்றனர் (54). மலப்பலகையில் இருவினைச் சங்கிலியாம் நியதியிற் கட்டுண்டு மண், விண், நாகு என்று மூவிடத்தும் பிறந்திறந்துழலும் உயிர்களை அவ்வவதியினின்றும் நீக்கிக் காத்துத்துவாத சாந்தப் பெருவெளியில் அவைகளையிருத்தி ஒப்பற்ற இன்பத்தைத்துய்க்குமாறு செய்யும் பசுபதி எனக் (96) கருத்துக்கூறிய செய்யுள் அழகுபெற அமைந்துள்ளது. உயிர் சார்ந்ததன் வண்ணமுடையது என்னும் அவ்வியல்பை அம்மானைப் பருவத்தில் பளிங்கிற்காக்கிக் கூறியுள்ள (73) பான்மை படித்தின் புறத்தக்கதன்றே?

சமயப்பற்றும் சமயநெறியொழுகுதலில் ஊக்கமும் மிகமிகக் குன்றி வரும் இக்காலத்தில் சமயப் பற்றையும் ஒழுக்கத்தையும் தெளிவுறக் காட்டிச் செய்யுள் செய்திருப்பது மிகவும் போற்றத்தக்கதே. பாட்டுடைத் தலைவியைக் காக்கவெனக்கூறிச் செல்லும் பாக்கள் இன்ன இன்ன கடவுளரை வேண்டுதல் நியதி எனப்பாட்டியல் கூறு நிற்கும். "முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப் பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி, அழியா மரபினது வழிநூலாகும்" என்பர் அறிவுடையோர். இதனையொட்டித் திரிசிரபுரம் மஹா வித்துவானும் எண்ணிறந்த பன்னூலாசிரியருமாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் தாரகை நடுவண் தண்பதி போலப் புலவர் குழாத்து விளங்கிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தாமியற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழுக்குக் காப்புப்பருவம் பாடியுள்ளது தமிழ்ச்சான்றோர் அறிந்ததே. காலப்போக்கையொட்டி இந்நூலாசிரியரும் மரபு வழுவாத விகற்பத்தை மேற்கொண்டு காப்புப்பருவம் பாடியுள்ளார் என்னை? இவர் காப்புப் பருவத்தில் முதற்கண் திருவருளை வேண்டுகின்றனர். அதன் பின்னரே திருமாலைக் கூறுகின்றனர். அவர்க்குப்பின் திருநீற்றை வழுத்துகின்றனர். அதன் பின்னர்த் தல மூர்த்திகளாகிய சோமசுந்தரர், அங்கயற்கண்ணம்மை, சித்திவிநாயகர், முருகன் இவர்களைப் போற்றுகின்றனர். இதன்பின் பிரமன், கலைமகள் துர்க்கை முப்பத்து முக்கோடி தேவர் முதலியவர்களை வழுத்தாது திருநந்தி தேவர், தமிழ்த் தெய்வம், நால்வர் இவர்களைத் துதித்து காப்புப்பருவத்தை நிறைவேற்றியுள்ளார். இங்ஙனம் கூறியதனால் மக்கள் தெய்வத்திருவருளை நாடல்வேண்டும் என்னும் திருநீறாகிய சிறந்த கருவியை உறுதுணையாகக் கொள்ளல்வேண்டும் என்னும் தமிழ் மொழியைப் பேணுதல் வேண்டும் என்னும் மெய்கண்ட நூல்களையும் தேவா

முதலிய திருவருள் நூல்களையும் படித்துணர்தல்வேண்டும் என்னும் கூருமற் கூறிக்காட்டியிருக்கும் பான்மை வியக்கத் தக்கது. இக்காலத்துக்கேற்ற உபதேச மொழியுமிதுவே, உபதேசிக்குமாறும் இதுவே என்பது கொள்ளக் கிடக்கின்றது. இந்நூலின் இறுதிக்கட்கூறியுள்ள மங்கள வாழ்த்துச் செய்யுளால் இங்கு எடுத்துக்காட்டியவுண்மை அங்கையின் நெல்லிக்கனியாதல் காண்க.

பாட்டுடைத்தலைவி "இலனென்னும் எவ்வமுரையாமை ஈதலாகிய" பெருங்குணமுடையார் என்றும் (64) வள்ளுவர் கூறிய பெண்ணலமனைத்தும் நிறையப் பெற்றவர், என்றும் (97) உற்றவிடத்தில் பாராட்டியுள்ளது இன்பத்தை யூட்டுகின்றது. புராணே திகாசங்களிற் கூறியுள்ள கதைகளுள் சிலவற்றை நயம்பட எடுத்துக்காட்டி மேற்கொண்ட விஷயத்தை வற்புறுத்துகின்ற முறை நன்ருக இருக்கின்றது. பாட்டுடைத்தலைவர் பிறந்த நாட்டின் பெருமையைக்கூறப் புக்க ஆசிரியர் மனுமுறை கண்ட செய்தியைக் கொண்டு அதனை விளக்குகின்ருர். சோழநாட்டின் பெருமையைக் கூற வெழுந்த இளங்கோவடிகளும் கண்ணகியின் வாய் மொழியாக "வாயிற்கடைமணி நடுநா நடுங்க, வாவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத்தான்றனரும் பெற்ற புதல்வனை யாழியின் மடித்தோன், பெரும்பெயர்ப் புகாரென்பதியே" என்று கூறியுள்ளார். திருத்தொண்டர் புராணம் செய்த தெய்வச் சேக்கிழாரும், தம்மைத் திருத்தொண்டர் புராணம் செய்யுமாறு தூண்டிய மன்னர் சோழராதலாலும் தாம் மேற்கொண்டு விரிக்கலுற்ற புராணத்தின் தொகைநூல் கிடைத்தது சோழநாட்டில் (திருவாரூரில்) ஆதலாலும் அவர் தமது புராணத்துக்கு நாடு சோழநாடு என்றும், அதற்கு நகர் திருவாரூர் என்றுங் கொண்டு மனுமுறை

கண்ட இச்செய்தியையே எடுத்துக்காட்டி நாடு நகரங்களின் பெருமை கூறிப்போந்தார். அவர் தமைப்பின்பற்றி இந் நூலாசிரியரும் இச்செய்தியையே எடுத்தாண்டு பாட்டுடைத் தலைவியாரது நாட்டின பெருமையை விதந் தோதியுள்ளார் (15).

அங்கம் பூம்பாவையாக்கிய திருஞானசம்பந்தச் செம்மல் அடியவர் பூசைச் சிறப்பை "உருத்திரபல் கணத்தார்க் கட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்" என்று எடுத்தோதித் திருவருள்கை கூடப்பெற்றனர். அதனால் அஃதெத் துணைச் சிறப்பு வாய்ந்தது என்பது விசதமாம். இதனை இந்நூலாசிரியரும் சப்பாணிப் பருவத்தில் வரும் "கொண்டலன" (33) எனத் தொடங்கும் செய்யுளால் தெளிவுபடுத்தியிருக்கின்றமை காண்க. அன்றியும் சாதாரணமாக மக்கள் எல்லாத் தானத்தினும் சிறந்தது அன்னதானம் என்று கூறுவர். தமிழ் மறையும் "ஆற்றுவாராற்றல் பசியாற்றல், அப்பசியை மாற்றுவாராற்றலின் பின்" என்று கூறுகின்றது. "அகரமாயிர மந்தணர்க் கீயிலென் சிகரமாயிரம் செய்து முடிக்கிலென், பகரும் யோகி பகலுண் பலத்துக்கு நிகரில்லை என்பது நிச்சயந்தானே" என்று திருமந்திரமும் முழங்குகின்றது. இதனையே இந்நூலாசிரியர் "அகரமொரு" (43) எனவரும் செய்யுளில் அமைத்துக்கூறி மகிழ்கின்றார்.

இனித் தமிழ் மொழியினிடத்துத் தமக்குள்ள பேரன்பினைக் காப்புப் பருவத்திலே பாராட்டுத் தலைவியாரைக்காக்க என்று "தமிழ்த் தெய்வ" த்தைப் பாசுவதிலிருந்தே புலனுவதோடு நூலில் ஆங்காங்கு "உவமிக்க வொண்ணு வளமிகுந் தேனொத்த தமிழ் எனவும், "கொழி சுவை மலிதமிழ் என

வும் "மதுரமிகுந்த தமிழ் எனவும் 'இமையவரமிழ்த யனைய தமிழ்" எனவும் தமிழைச் சிறப்பித்துக் கூறிச் சேறலானும் தெளிவாம்.

"முன்னோர் மொழி பொருளேயன்றி யவர் மொழியும் பொன்னே போல் போற்றுவம்" என்னுமிலக்கணத்துக் கேற்கப் பெரிய புராணம், தேவாரம், திருவாசகம் முதலிய அருள் நூல்களிலும், மெய்கண்ட சாத்திரங்களிலும், சங்கச் செய்யுள்களிலும் உள்ள சொற்களையும் சொற்றொடர்களையும் தமது செய்யுள்களில் இந்நூலாசிரியர் பெய்து வைத்துள்ள பான்மை நூலுள் எங்கும் காணலாம்.

சைவ சமயத்தில் சிறந்துள்ள இயல்பு அன்பே. "அன்பே சிவ" மெனக் கூறுவர் அறிந்தோர். அவ்வன்பு இப்பாட்டுடைத் தலைவியாரிடத்துத் தலைசிறந்து காண் கின்றது. இத்தன்மை அறிஞர்களால் மிகப் பெரிதும் பாராட்டப்பெற்றிருக்கின்றது. என்னை

"சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையள் அன்பிருந்த வாறு." என்றும்

"இலைபடர்ந்த பொய்கை இடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்னின்—நிலைவிளம்ப
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
இங்கு யர்ந்தா ளார்சொல் எனக்கு." என்றும்

முறையே உய்யவந்த தேவ நாயனாரும் சிவப்பிரகாச சுவாமிகளும் கூறியுள்ளவற்றைக்கொண்டு தெளியப்படுத லின் என்க. எனவே இந்நூலாசிரியரும் ஊசற்பருவத்தில்

"பார்புகழு ஞான சம்பந்தருக் கமுதூறு படர் கொங்கை யாரமாட" என்று கூறித் திருஞானசம்பந்தர்பால் பாட்டுடைத் தலைவியார்க்குள்ள அன்புப் பெருக்கைச் சிறப்பித்துக் காட்டியுள்ளார்.

இப்பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்துக்குப் பாட்டுடைத் தலைவியாய் அமைந்தவர் சிவபத்தி முதிர்ந்தவர். சைவ வெண்டிரு நீற்றொளி எங்கும் பாவவேண்டும் என்னும் சிறந்த நோக்குடையார். இத்தகையாரைக் கவி கூறிப் பாராட்டுதல் சாலச் சிறந்ததே. ஆகையினால் எனது நண்பர் திரு. நடேச கவுண்டர் அவர்கள் இப்பணியாற்றியது எனக்கு மிக்க மகிழ்ச்சியையுண்டுபண்ணியது. செய்யுள் செய்யும் ஆற்றல் படைத்த அவர் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினரைப் பாட மனங்கொள்ளாது கூன் பாண்டியனை மணந்து, தமது செயற்கருஞ் செயலால் அப்பாண்டியனது உடற் கூனையும் மனக்கூனையும் ஒருங்கே மாற்றி, அவனை நின்ற சீர் நெடுமாறனுக்கிய மனைமாட்சியுடைய மங்கையர்க் கரசியாரைப் பாடலுற்றது மிகவும் நல்லதேயாம். மங்கை யர்க்கரசியார்பால் வைத்த அன்பின் மிகுதியாலெழுந்த பாடல்களாதலின் அவை தங்கு தடையின்றிப் பல் சுவையும் பல்லழகும் வாய்ந்து, இனிய எளிய நடையான் ஆற்றொழுக் கெனச் செல்லுகின்றன. இதனையாக்கியோர் இதுபோலும் நன்னெறி பயிலும் நூல்கள் பலபல இயற்றித் தமிழகத்தில் பரப்புவாராக! தமிழுலகம் அவற்றையேற்றுப் பெரிதும் போற்றுமாக!

இத்தகைய நூல் இயற்றுவது ஒருபுறமிருக்க; மற்றங் ஙனியற்றிய நூலைப் பாவை சூழ்கிடந்த வியவையகத்து மக்கள் பலரும் இதனை எளிதிற் பெற்றுப் படித்துப் பயன்

பெறவைப்பது பெரும் புண்ணியமன்றோ? நமது தமிழ் மொழியின் கண்ணும், தமிழ்ப் புலமை வாய்ந்தவர் கண்ணும் அளவுகடந்த அன்புள்ள நண்பர் திரு. S. R. வெங்கட கிருஷ்ண முதலியார் B. A, அவர்கள் இப்புண்ணியச் செயலை மனமுவந்து மேற்கொண்டு, இந்நூலை அச்சுவாகனத் தேற்றி ஆர்கலியுலகில் அணிபெற உலவச் செய்தனர். அத்தகைய புண்ணிய சீலராகிய முதலியாரவர்களும் எனது பாராட்டுக் குரியவரேயாவர். அவர் இத்தகைய அறவினை களாற்றலில் ஊக்கங்கொள்ளுமாறு அவர்க்குத் தனிமுதற் கடவுள் தண்ணருள் சுரப்பாராக.

இரத்தினசபாபதிபுரம்,<br>கோயமுத்தூர்,<br>3-4-41.

பண்டிதர்,<br>சி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை.

"தென்னா டுடைய சிவனே போற்றி<br>எந்நாட் டவர்க்கு மிறைவா போற்றி."

# சாத்துகவிகள்.

உ

குருவே துணை.

சிரவணபுரம், சதுர்வேத சித்தாந்த ஷண்மத சமயாதீத அத்துவித கௌமார சபைத்தலைவர்

## ஸ்ரீலஸ்ரீ. கந்தசாமி சுவாமிகள்

சாத்துகவி.

கட்டளைக்கலித்துறைகள்.

சைவந் தழைக்கமெய் காட்டிய ஞானசம் பந்தவருண்
மைவந்த தன்மைதன் மைவந்த கண்வழி மாந்தியன்பாற்
கைவந்த செய்தவ மேனிமன் சீர்மங் கையர்க்கரசி
மெய்வந்த சீர்த்தி வியனுல கெங்கு மிளிர்தரவே (க)

பொற்பணி பூட்டினன் முன்னு ளயன்பின் புகழ்வளவன்
கற்பணி பூட்டினன் பின்பூட்டி னன்கற் பணிசெழியன்
அற்பணி பூட்டினன் ஞானசம் பந்த னணிந்துவக்க
நற்பணி யாஞ்சொற் பணிபூட் டினனன் னடேசனரோ (உ)

சங்குந்து காவிரி நாடு மணிமுத் தமிழினயம்
பொங்குந்து பாவிரி நாடு மணியும் புகழ்த்தவநங்
கொங்குந்து பூவிரி நாடும் படைத்துக் குளிரவின்ப
மிங்குந்து நாவிரி நாடு நடேசன்மெய்க் கேற்றவனே (ந)

சிமிழ்தக்க தாய்ச்சுரப் பார்கொங் கையினிற் சிமிழ்ப்புறுபா
லமிழ்தக்க வின்சேய் செவிப்பெய்மங் கையர்க் கரசிபிள்ளைத்
தமிழ்தக்க தென்ன வினவுநர் காதன்றித் தங்களுள்ள
மமிழ்தக்க தாப்புனை வாள்பே ரழகொ டமைத்தனனே. (ச)

காவைப் பதித்தன ரோமண்ணரி லென்னக்கண் காட்சிமிக்க
மாவைப் பதித்த மணிமாட கூட மறுகமைந்த
கோவைப் பதிக்குடிக் காராளன் சிந்தைக் குடிற்குடியாத்
தேவைப் பதித்தகத் தேவையெல் லாம்பெறுந் திண்ணரியனே (ரு)

பேர்த்திறத் தாலப்ப னெற்கம் புவியின் பிறப்பிசைமெய்ச்
சீர்த்திறத் தான்முறைப் பாலன் றமிழ்க்கவி செப்புமியல்
பேர்த்திறத் தாலு மிறை வன்பொற்றாள்க ளிருதயந்தோய்
நார்த்திறத் தாலுய்வித் வானே நடேசநன் னுவலனே (சு)

வீணுக்க வந்த பிறப்பை நாத்துதி மிக்கிசைக்க
நாணுக் கவிஞ ருளநா ணணிதோய் நடேசதுங்கன்
எணுக் ககத்துளன் பெய்தலி னுலெனக் கேற்றமுற்ற
மாணுக்க னென்னவும் பன்னிடு நாவதென் வாயினதே (எ)

ஆக்கிய பாக்கண மல்லாது பாக்கியு மன்பின்மிக
வூக்கிய சிந்தையுட் பாரதி நல்க வுவந்திசைவாய்ப்
போக்கியம் பெற்றப் போக்கியப் பாலிற்பொருத்துமியற்
பாக்கிய முற்றின்பின் வாழ்க நடேசநம் பாவலனே. (அ)

தெய்வமே துணை.

## தோரமங்கலம். ஆசிரியர்
## அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் கூறியவை.

வெண்பிறைச்செஞ் சடையிறைவ னேவலிற்பொற்
கிண்ணத்து விளங்கு ஞானப்
பண்பமைந்த வம்மைமுலைப் பாலூட்டச் சீகாழிப்
பதிவாழ் வுற்றூர்

விண்பாவுந் தமிழ்விரக ராப்பிள்ளைப் பிரானென்ன
விளம்பக் கேட்டக்
கண்பாவும் பேரன்பான் மூலைசுரந்த மங்கையருக்
கரசி மீதே.

தெள்ளுதமிழ்ச் சுவைதுறுமுஞ் சொற்களினுற் கற்பவர்க்குத்
தெவிட்டா வின்ப
வெள்ளமிக வருப்பிள்ளைக் கவியுரைத்துத் திசையிலிசை
விரித்திட் டானுற்
றள்ளருநீர்க் காஞ்சியின்வாய் முத்திநெறிப் பேரூராந்
தலத்தை யண்மும்
விள்ளருஞ்சீர்க் கோவையுளான நடராச னெனும்புலமை
மேதக் கோனே.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ்
விரிவுரையாளர், பண்டித,
ந. மு. வேங்கிட்டசாமி நாட்டார் அவர்கள்
இயற்றியவை.

உமையா ளளித்த பரஞான முண்ட
உயர்காழி ஞான முனிவன்
அமண்மா சறுத்த மிகுசைவ மோம்பு
மருளா தரித்த திருமான்
தமிழ்நா டுளுற்று தவமோ டுருக்கொள்
தனிமானி மாத ராசி
இமையாரு மேத்த உரியா ளடிக்கண்
எழுகின்ற அன்பி னிசைவால்.

களியொன்று செஞ்சொல் பொருளொன்று பிள்ளைக்
கவியொன் றளித்த புலவோன்
அளியொன்று நெஞ்சி னமையாநல் வண்மை
அணிநின்ற செல்வர் நனிவாழ்
துளியொன்று கொண்டல் படிகின்ற சோலை
துதைகொங்கு வேளிர் மரபோன்
நளியொன்று கோவை நகரொன்று மன்ப
னடேசன்செந் நாவ லவனே.

## ரெவினியூ இன்ஸ்பெக்டர் திருவாளர் பேரை. ரா. முத்துச்சாமி அவர்கள் இயற்றிய வெண்பா.

மங்கைத் தனியரசி; மாதேவி; தென்னர்தம்
பொங்கு பழிதீர்த்த பொற்பாவை—எங்கள்குல
தெய்வம்சீர் சைவம் திருநீ றருந்தமிழ்நா
டுய்விக்க வந்த உயிர்.

குன்றனைய வெஞ்சமணர் குன்றிவிட மெஞ்ஞானக்
கன்றைத் தருவித்த கற்பகமாம்—என்றும்
சிவநெறியே நின்று திருத்தினபின் மன்னைத்
தவநெறியில் வைத்திட்ட தாய்.

அன்ன சிறப்பின் அரிவையர் தம்மரசைப்
பன்னு தமிழ்மொழியிற் பாடினான்—பன்னலத்துக்
கோவைநகர் வேளாண் குலத்தினன்; அன்புடையான்
பாவை தனையுடையான் பால்.

நல்ல குணமுடையான்; ஞானந் தருநூல்கள்
வல்லை உணரு மதிமிகுந்தான்;—சொல்லு
முறையறிந் தூட்டியெமை முன்வைக்குஞ் சீரான்;
இறைபணியுஞ் செய்வான் இசைந்து.

உள்ளங் கவர்வகையில் ஒண்டமிழில் மங்கைதன்
பிள்ளைத் தமிழ்க்கவியைப் பேசினான்—வள்ளல்
நடேசக் கவுண்டர்; நயந்தார் முதன்மை
இடார்காண் பிறர்தமிழ்க் கே.

உடுமலைப்பேட்டை, தமிழ் வித்வான் கர்ணாம்ருதம்
வெ. ரா. கந்தசாமி பிள்ளை அவர்கள் இயற்றிய
நிலை மண்டில வாசிரியப்பா.

பூவா ழயனொடு பொறிவாழ் மார்பனும்
தேவா காவா வெனநின் றேத்தக்
காத்தல் செயுமா கண்டங் கருத்தோன்
தோத்திரம் சொல்வரைச் சுகத்தி லிருத்தும்
தேவாதி தேவன் திருவரு ளதனால்
நாத்திகம் பேசும் நரபசு வர்க்கமும்
சாத்திரங் கொள்ளாச் சண்டச் சமணரும்
சூத்திரம் பேசும் கொலையூ னுண்பரும்
ஒழிதல் வேண்டி உவர்க்கடல் மிதந்த
தோணி புரத்துள் தோன்றுபு வந்த
ஞானசம் பந்தன் நல்வற முனிவன்
கானமர் காழிக் கவுணியர் குலமணி
பேரருள் பெற்ற பெருந்தவச் செல்வி
அபயன் குலத்தி னருந்தவப் புதல்வி
செழியன் தவங்கள் சீர்பெற வந்த
மங்கையர்க் கரசி மாதவர் போற்றும்
சைவ சிகாமணி தவமுடை யுத்தமி
மதுரைக்கிழத்தி மாறன் தேவி
தமிழ்மறைச் செல்வி சாந்த பூடணி
அன்னவர் பொன்னடி அணியெனப் புனைய

நம்மவ ரறிவு நன்னல மாகி
இம்மையி லின்பம் எண்ணின பெறவே
தோத்திர மாகவும் சொல்வள முதலிய
ஆழ்ந்த பொருளமை அணிவள முதலாம்
கவியமை சீரொடு கண்டோ ருவகை
கொண்டுய ரன்பர் குதுகுதுப் பெய்த
பிள்ளைக் கவியெனப் பேசின னருள்சீர்
பேசு நாவினன் பெருமறை யோதுறு
கோவை நகர்வாழ் கங்கை குலமணி
நம்மனோர் புகழு நல்லறி வாளன்
சைவச் சீலன் தவமுனர்ப் புரிந்த
புண்ணிய வடிவினன் புகழுடை யாக்கையன்
எடுத்த பிறவிக் கிதுதவ மெனவே
எண்ணும் பேரறிவாளன் எழிலார்
நடேசன் திருவடி நாடும்
நடேசன் னெனுநன் னுமத்தோனே.

## சாத்துக்கவி.

திங்களணி சிவன்றனையும் கணவரையும்
தேற்றுதுசமனைச் சேர்ந்த
மங்கையரை *அரசர்களாய் வகுத்தருளிச்
சிவம்பேணி வழுதியான
தங்கொழுநன் வழுவகற்றுந் தமிழ்மங்கை
யர்க்கரசித்தாயின் மீது
பொங்கிவழிந் தொழுகுசுவை நறும்பிள்ளைத்
தமிழ்மாலை புனைந்தான்மன்னே.

தேவிப்ணி மகிழ்ந்துவெள்ளி மன்றிறைவன்
தொடைபுனையச் சேர்ந்தானென்னப்
பாவொழிந்திலாத வயல்பரந் தொளிரக்
கமழ்தமிழின் பரிமளஞ்சேர்
கோவைநக ருறைகவிஞன் கொங்குவே
ளாளர்குலக் கோமான்கோடா
நாவுறையும் பலகலையான் நடேசனெனப்
பெயர்படைத்த நலவன்மாதே.

*அரசர்களாய் = இரசமில்லாதவர்களாய்.

சிதம்பரம்,
மௌன சாமிகள் மடம்.

இங்ஙனம், சங்கத்து
பண்டித, சித். நாராயணசாமி.

திருப்பூர் நஞ்சப்பா உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர்
வித்துவான், K. பழனிச்சாமிப் புலவர் அவர்கள்
இயற்றிய சாத்துக்கவி.

---

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

நான்மொழிக் கோசரென்றும் நன்மொழிக் கோச ரென்றும்
வான்மொழிச் சிறப்பின் மிக்க வளர்புகழ்க் கோசரென்றும்
தான் அணிந் துரைத்த சீரில் தழைத்தவர் வாழ்வுமேய
மேன்மைசேர் கோவை வந்தான் வித்தகன் நடேசனென்பான்

அங்கவன் தந்ததாகி அழகொடு விளங்கு மிந்த
மங்கையர்க் கரசி பிள்ளை வளர்தமிழ் மாலைதானும்
பொங்குறு மமுதுபோலும்; புணைமணி மாலை போலும்;
தங்குறு மான்றோர் நெஞ்சம் தழைத்திடச் செய்யும், நன்றே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மங்கையர்க்கரசியார் பிள்ளைத் தமிழ்.

காப்பு.

க. திங்களணி கங்கைநதி தங்கிய சடைப்பிரான்
திரிபுர மெரித்த ஞான்று
தேவர்கள் செய்தேரச் சிறுத்து வழிபாடவர்கள்
செய்த பினல் வெற்றியாக்கி
அங்கணுல கத்தெவர்க ளெச்செயல்செய் தாலுந்த
னடியிணைகள் பாவினுதவி
யல்லாவிடிற் றடைசெய் வல்லமை விளக்கியசெவ்
வாம்பலடி மலர்க டொழுவாம்
பொங்குதிரு வெண்ணீற்றி னொளிபரவ வமணவிருள்
பொன்றவடி யவர்க ளிதயப்
போதவிழ ஞானசம் பந்த சிவசூரியன்
புகழ்மதுரை புகவழைத்த
மங்கையர்க் கரசியை வளவர் கோன்பாவையை
வரிவளைக் கைம்மானியை [க
வழுதியர்கள் குடிதழைய வந்தவரு ளமுதத்தை
வாழ்த்துமென் றமிழ்தழையவே.

## காப்புப்பருவம்.

### திருவருள்.

உ. நீர்கொண்ட பூம்பொய்கை வாய்நின் றழைத்தசேய்
நிமலமெய்ஞ் ஞானம்பெற
நிகரிலமு துதவியொண் டமிழ்மறை புதுக்கி யொளி
நீடு தாளங் கொடுத்துச்
சீர்கொண்ட தொண்டருறை திருமடத்திடு மனலோர்
தென்னனுட றுன்னுவித்துத்
திருநீற்றி னலதனை யொழிவித்துயக் கொண்ட
திருவருளை மனதி னினைவாம்
ஆர்கொண்ட மாலைபுனை தோள்கொண்ட சோழர்குடி
யாற்றுந் தவத் துதித்தே [க்
யணிகொண்ட தமிழ்மதுரை யிறைகொண்ட வாழ்க்கை
கருந்துணைவி யாகி யிந்தப்
பார்கொண்ட வமணிரு ளழித்துவெண் ணீற்றொளி
பரப்பிப் புரந்த வெங்கள்
பாண்டிமா தேவிதிரு மங்கையர்க் கரசிபூம்
பாவையைக் காக்க வென்றே (க)

### திருமால்.

ந. மணிகொண்ட பாலாழி முழுதுண்ட பவளவாய்
மகவினருள் பெறு சீடனாய்
மலரடிகண் முடிமீதி லமர் பேறு பெற்றானை
வந்தித்து மைந்தனெய்தித்
திணிகொண்ட வாணவ மெனும்பிணி தவிர்ந்தொரு
செருக்களந் தன்னில் விசயன்

றெளிவுபெற வுபதேச முதவியருள் கருணைமலி
திருமாலி னடிக டொழுவாம்
அணிகொண்ட போதையார் பொற்கிண்ண வமுதுமை
யளிப்ப வுண்டாண்டு மூன்றில்
அரியதமிழ் மறைபாடு சிரபுர மறைக்கன்றி
னன்னையாய் மன்னு பொன்னைப்
பணிகொண்ட மொழிமங்கை யர்க்கரசி யம்மையைப்
பங்கயச் செல்விதன்னைப்
பாண்டிமா தேவியைச் சைவநெறி வாழவரு
பைந்தொடி தனைக்காக்கவே (௨)

திருநீறு.

௩. பூசமிக வினியதாய்ப் புண்ணியந் தருவதாய்ப்
பொய்யாத மறை புகழ்வதாய்ப்
போதமிகு விப்பதா யேதமகல் விப்பதாய்ப்
புத்திமுத்திக்கு வித்தாய்
நேசமிகு விப்பதா யாசையை யறுப்பதாய்
நெஞ்சவிரு ணீக் கிரவியாய்
நெற்றிக்கொ ரணியாய திருவால வாய்முதல்வ
னீற்றினொளி போற்றுதல் செய்வாம்
தேசுமிகு முத்தமும் சந்தனத் தேய்வையுந்
திருநீறு மார்பணிந்தே
சிவனடிகண் முடிமீது மலர்வித்த கொடியையெஞ்
செல்வத்தை மல்கு கொன்றை
வாசமலி தென்றல்வந் துலவுபொன் முன்றின்மலி
மாடமதுரைக் கிறைவியை
மங்கையர்க் காசியைப் பங்கயச் செல்விமட
மானியைக் காத்தருளவே (௩)

## சோமசுந்தரர்.

ரு. தான தந்தன தனதன—தானதந்தன தனதன
தான தந்தன தனதன—தானதந்தன தனதனத்தாத்தன

பாடுகின்ற பன்மறைகளு மாகமங்களு முணர்வரு
பாதபங்கய ருருவுரு வாவர்தங்கழ லறிவதிற்போட்டிகொள்
பானெடுஞ் சலதியிலொளி வீசுகின்றபன் மணிமுடி
பார்சுமந்திடு பணிமிசை மேவியின்பொடு துயில்பவர்க்கேச்
பாலினின்சுவை மிகுமொழி நாமடந்தையி னலனுகர் [சது
பாடுவிஞ்சிய மறையவ னுதி யண்டர்கள் துருவுகோத்தமர்
பாசபந்தவல் வினையற வாசைகொண்டப லுயிர்வழி
பாடுபண்பொடு செயநில மீதரும்பதி பலவிடைத்தோற்றினர்

தோடுகொண்ட பன்மலர்புன றாவியன்பொடு வழிபடு [னர்
தோமிலந்தண னுறுகுறை தீரவன்பொடு புகறமிழ்ப்பாட்டி
சூகரந்தரு குருளைக டாயிறந் துணவறுமிகு [ட்டினர்
சோகவன்பிணி தவிர்வகை யாலொர்பன்றியி னுருவெடுத்தூ
சோர்விலன்பொடு வழிபடுபாணன் வென்றிகொ டுயும்வகை
தோதுடன்றலை மிசைவிற கோடுபண்புக திறமிகக்காட்டினர்
தூயதொண்டர் களுளநிக ராயிலங்கும துரையமர் [றுதும்.
சோதியண்டர்கள் வழிபடு சோமசுந்தர முதல்வனைப்போற்

ஏடுகொண்டப துமமல ரானடைந்துவ ழிபடுசு
வேர்மிகுந்தபி ரமபுர நாதனப்பிகை யவளொடுற்றாட்டமு
நீறறும்பர சிவமிகு ஞானமும்பிரிய மொடுணு
மீடிலந்தண மணிபிர பாவமஞ்செவி யுறவகத்தூற்றெழு

மேசிலன்பினி விருதன மூறிநின்றுமை யவளினு [டியி
மீரம்விஞ்சிய பெருமைய ஞானிலந்தனி லவணிருட்டோட்
டேறமன்பதை யருளிய தாய்பரம்பரை யானடி
யேதொழுந்திரு வளவர்கண் மாதவந்தனி லுலகிடைத்
[தோற்றினள்.

நீடுகொண்டல் கடவழ்மணி மாடபந்தியிலசை கொடி[ட்டளி
நேர்மடந்தையர் சதிவழி யாடுகின்றது பொருவெனப்பா
நீயெனுஞ்சுதி யுடனிசை பாடுகின்ற பொழிலின்மா [பொடு
நீழலின்புறுகவியின மேகமொன்றி டிமுழக்கினுக்கேற
நீளுகின்றகை விறல்பட வாடுகின்ற வெழிலின்மிகு
நீர்மிகுந்தவை யையின்மலி கூடலம்பதி யிறைவிபெற்றூர்க்கிரு
ணீசவஞ்சக வமனெறி சோலின்றிந லருணெறி
நோவென்ற ரனடிபணி நேரின்மங்கையாரசி யைக்காக்க
[வே. (ச)

அங்கயற்கணம்மை.

சீ. தேனேறு செங்கமல மேலேறு தேவுமலி
திருமகட் கொருநாதனுந்
திங்களங் குடையவனு மாஷேமுக னும்பெரிய
சேவேறு தேவதேவும்
ஆனது தொழில்புரிவ திவளருளி னாலென்ப
தறியவவர் படைகடாங்கும்
அங்கயற் கண்ணியிரு பங்கயப் பொன்னடிக
ளஞ்சலித் துத்துதிப்பாம்

மீனேறு கொடியுடைய நெடுமாற னுக்கினிமை
மேவுமமுதைச் சென்னியர்
விளைதவத் தால்வந்த கனியைக் கரும்பையொளி
மிக்கமாணிக்க மணியை
வானேறு மதிதவழு மாடமலி கூடனகர்
மன்னியருணெறி வளர்த்த
மங்கையர்க்கரசியெனு மெங்கள்குல தெய்வத்தை
மாருது காக்கவென்றே (ரு)

சித்திவிநாயகர்.

எ. தானப் பெருக்கா லுளக்கறையுந் தவள மருப்பால்
வெளிற்றறிவுஞ்
சாடிப்பிறவிச் சேற்றிலழுந் தாமே துதிக்கையானெடுத்தே
தீன வடியார் தமைக்கதியிற் சேர்த்துக் கடம்பாடவிப்
பொலியுஞ்
சித்திக் களிற்றி னடித்துணைகள் சித்தத் திருத்தித்
தொழுதிடுவாம்
பானற் கருங்கட் டிருவிநெடு பானற் கடலிற் றுயின்
முகில்போல்
பளிக்குப் பரிகை மிசைச்சபலை பரித்துக் கருக்கொண்
முகிறுயிலும்
மானக் கூடற் பதிபுரந்த வளைக்கை மடமான் விழிமயிலை
மாதர்க் கரசாந் திருப்பாண்டி மாதே வியைக் காத் தருள்
செயவே. (சு)

## முருகன்.

அ. தந்தனத் தனனதன தந்தனத்தனனதன
தந்தனத் தாத்ததனன

சந்தமிக் கிலகுமறை நன்குகற் றவனையவ
சம்படத்தாக்கி யிருளார்
சஞ்சலச் சிறைபுகுத முன்புவைத் துறுபொருள்கள்
சம்புவுக் கேற்ப மொழிவான்
செந்தினைப் புனமருவு பைங்குறக் கிளியினசை
சிந்தையிற் றேக்கியனுகாச்
சிந்துரத் துடனிரலை பன்றியித் தினையின் வழி
சென்றிடப் பார்த்த வுளவோ
கந்தாக் குழலிவடி வம்பலைக் கருவிழிசு
கம்படச் சாற்றுகெனவே
கஞ்சமொத் திலகுகா மஞ்சலித் தவள்சொல்விழை
கந்தனைப் போற்றுதல் செய்வாம்
பந்தமற் றவர்கடொழு சுந்தரக் கடவுளடி
பண்படப் போற்று மியல்பாள்
பங்கயத் திருவைநிகர் மங்கையர்க் கரசியொளிர்
பைந்தொடிக் காக்க மிகவே. (எ)

## திருநந்தி தேவர்.

கூ. பாசொளி விரிக்கு மாகதம்தழைத்துப்
பவளமே பழுத்த கல்லாலின்
படர்குளிர் நிழற்கீழ் நால்வருக் கானூர்
பழுதறப் பகர்ந்த மெய்ப் பொருளை
ஆசொளித் தோடி யுயிரெலா முய்ய
வருட்குரு முதல்வனு யளித்தவ்

வான்றனக் கடுத்த புகழ்பெறு நந்தி
யடிமலர் முடிமிசையணிவாம்
வீசொளி ப்பவள வரைவிரைப் பச்சை
மென்கொடியொடு மகமேரு
வெற்பினிலிருந்த விதமொளிர்மான
மேவிநற்றேவியோ டிருந்தோன்
பூசொளித் திருநீ றுெண் ணுதற் கணிந்தொண்
பூங்கழல் புந்தியிற் பதித்த
புண்ணியக் கொடியைக் கண்ணிடை மணியைப்
பூவையைக்காவல் செய்கெனவே (அ)

## தமிழ்த்தெய்வம்.

௯. அருமறை களாலுமுணர்வரிய திரு வடிமலர்க
ளாரூரில் வீதி தோறும்
அத்தராத் திரியிலொரு தெரிவை யுறு முனிவகலு
மாறுபல கான டக்கத்
திருமகள்பின் வரவரவ வமளியொடு கரியமுகில்
சீரடிய னேடுசெல்லச்
செய்துலகி லெம்மொழியி னும்பெரிய பெருமைபெற
செந்தமிழை வந்தனைசெய்வாம்
கருமைமிகு கடலுமொரு துளியென நுகர்ந்தமுனி
கரைகாண வரியதமிழைக்
கற்றபெரியோர்கள் புகழ் திருமதுரை யிறைவனிரு
கமலமல ரடிகடம்மை
ஒருமையொடு திருவுளத் துஞ் சிரத் துந் தரித்
துயர்காழி முனிவனருளால்
உலகமுழு துஞ் சைவ நெறி தழுவ வைத்த புக
ழுத்தமி தனைக்காக்கவே. (௯)

நால்வர்.

மக. வெந்துபொடி யாகிய வெள்ளத்தியிற் பூவைவா
விண்ணேங்கு பெண்ணையாணுய்
விளையாதிருந்த செயன்மாறிப் பயன்றா
விளைத்தவெங் குருநாதனை
நந்துபடி யலைகடலு மேழுபிற விக்கடலு
நாதனரு ளாற்சிலையுமுண்
ணவில்கின்ற வைந்தெழுத்துந் தெப்ப மாகமுன்
ணுளிற் கடந்தவாசை
மூந்துபொற் சங்கிலியி ஞற்றுேடக் குண்டுநார்
மொய்த்தபா வைக்குள் வீழ்ந்தும்
மோகமில ஞனதிரு நாவலவர் கோனைமறை
முதல்வர்க்கு மணிமொழியொடே
சொந்தமிக நானூறு காரிகை யளித்தவத்
தோன்றலைத் தொழுது புகழ்வாஞ்
சோழர்குடி வாழவரு மங்கையர்க் காசியாந்
தோகையைக் காத்தருளவே. (ம)

## உ. செங்கீரைப்பருவம்.

மஉ. கொண்டலை நிகர்த்தகுழ னீழலொளிர் முழுமதிக்
குளிர்முகமொ ணிலவெறிப்பக்
குமுதமலர் நிறைநறவு பொழிவதென பணிவாய்க்
கொழுங்கடையி ஞறல்வழிய
வண்டலைய விதழ்கள்விரி புண்டரிக மலாணைய
மணியாழி யங்கை விரல்கள்
மண்மீ துறப்பதித் தொருமுழந் தாளூன்றி
மற்றையொரு தாணிமிர்த்துக்

கண்டலகி றவமுயன்றே பெற்ற தாய்தந்தை
கண்பெற்ற பயனிதென்னக்
களிகூர விளவெயிற் காலேயொளி கூருமொரு
காமர்கற் பகவல்லியீர்ங் [ற்
திண்டலைப் பொதியில்வரு தென்றல்பெற் றசைதல்போ
செங்கீரை யாடியருளே
செழியர்குடி தழைய வருண் மழையுதவுகற்பாசி
செங்கீரை யாடியருளே.

௰௫. வானெத்த நீலக் குழற்கணணி தாரகை
வருக்கமொத் திலகு மலரின்
மதுமெத்த வுண்டுதுயில் வண்டின மெழுந்தாட
வளருமெண் ணாட் பிறையினைத்
தானெத்த வாணுதலினிட்ட திருநீற்றி னெழு
தவளவொளி மிகவுமாடத்
தாமரைக் கொழுந னொளிநிகர மகரக்குழைச்
சாதிமணி யொளியுமாட
மீனெத்த கருவிழியி லெழுநீல வொளியாட
வெண்ணித் திலக் கோவைமார்
மீதாட வமணருள் ளந்துயரிலாட வுவ
மிக்கவொண் ணு வளமிகுந்
தேனெத்த தமிழ்மதுரை தழையவரு மொருதலைவி
செங்கீரை யாடியருளே
செழியர்குடி தழையவருண் மழையுதவு கற்பாசி
செங்கீரை யாடியருளே.

௧௪. பங்கயப் புதும லரிருந்துலக மெல்லாம்
படைக்கின்ற பண்ணவனுமப்
படியெலா மடியினு ளிருத்திப் புரந்துவெண்
பாற்கடற் றுயிலுபவனும்
அங்கையிற் புனறூவி வழிபாடு செய்கழலெம்
மையர் செம்பாதியாகி
யலகிலுயி ரைந்தொழி லுறப்புரி பரம்பரைத
ணருளினொரு செழியன்மகவாய்
வெங்கயப் புரவல ரெலாரையுஞ் செருவினிடை
வென்றுதண் மதிக்குடைக்கீழ்
வியனுலகு நெறிமுறை நடத்திய கடம்பவன
மேவியுறை பூவையாய
செங்கயற் கண்ணியருள் பொங்கு மங்கையரசி
செங்கீரை யாடியருளே
செழியர் குடிதழைய வருண்மழை யுதவுகற்பரசி
செங்கீரை யாடியருளே.

௧௫. தன்குலம் விளக்கவரு மருமந்த மைந்தனிவர்
தமனியத் தேருருளையிற்
றாவிக் குதித்தோடு மானிளங் கன்றொன்று
சாவவது தரியாததாய்
மின்குல மிகுந்தமணி மாளிகையின் முன்றிலுறு
வெண்கலநன் மணிநாவினை
வெந்துயரொ டுந்திவிழி சிந்தருவி பாயவசை
வின்றிநின் றிடவுளுருகி
நன்குல வமைச்சர்தடை சொல்லவு மறுத்தவனை
நடுவீதி யிற்கிடத்தி

நானிலம் விதிர்க்கமரு மத்திலுறு தேரினை
நடத்திமுறை செய்தவளவன்
தென்குலம் விளங்கவொரு மகவா யுதித்தமயில்
செங்கீரை யாடியருளே.
செழியர்குடி தழையவருள் மழையுதவு கற்பாசி
செங்கீரை யாடியருளே.

கசு. கூனலஞ் சிறுவெண் பிறைக்கண்ணி பொன்னொளி
குலாவுசெங் கோடீரமேற் [ளி
கொண்டகொண் டற்கண்ட னண்டர்குழு மண்டவொ
கொண்டமுறு வற்றெண்டைவாய்ப்
பானலஞ் செங்கணழ கொழுகுமிமை யப்புதல்வி
பங்கயச் செங்கையங்கை
பற்றுதிரு நாளிலவ னுற்றபளு வானலிவு
பட்டுலகு தட்டருமே
பானலஞ் சான்றதமிழ் பாவுதென் றிசையுறுக
படிவமிகு குறுமுனிவவென்
பாடுபெறு வோர்நினைய லாதொருவ ரிலையெனப்
பரமனருள் செயுநன்முனிசேர்
தேனலஞ் சீருவி பாய்பொதிய மலையிறைவி
செங்கீரை யாடியருளே [ல்
தென்னர்குடி நன்னெறியின் மன்னவருள் பண்ணுமயி
செங்கீரை யாடியருளே

கஎ. வேறு.

மஞ்சினுர்விஞ்சு கருங்குழறுன்றிசை வண்டு சுழன்றாட [டக்
வளரிள வொளிதவழ் நுதலணிதிலக மணஞ்சேணுங்கூ

கஞ்சமி குந்தரு கொன்றியவள்ளி கலந்த கருஞ்சேனோர் [டக்
கண்கள் பொலன்குழை யொன்றிய காது கலந்துகலந்தா
கொஞ்ச மலர்ந்திடு செங்குமு தம்பொழிகொங்குமி குந்தேனிற்
கொவ்வைச் செவ்விதழ் வழியொழுகூறல் குலாமார்
பூடாடச்
செஞ்சடை யங்கண னன்பு நிறைந்தவள் செங்கோ செங்கீரை
திருமது ரையிலரு ளுருவெனநின்றவள் செங்கோ
செங்கீரை

ம௮. தனதன தனதன தனதன தனதன தந்தாதந்தாளு.

மனமெனு மலர்விரி தரவத னிடைவரு செந்தே னெந்தாயே
மலமறு மடியவர் குடிதழை வுறவருள்வந்தே தந்தாள்
வோய்
பனகமின் மணியணி யணியா னடிதொழு பண்பார்
கண்போல்வாய்
பசுமயி லனமட நடயுடை யுமையவள்பங்கா மெங்கோ
மான்
அனகவ டியர்மலி மதுரைந கரிறைவி யஞ்சா நெஞ்சார்மா
சமணவெ யிலொழிய வருமழை யனையவ ளந்தீபம்
போல்வாய்
தினகரன் மரபினில் வருமொரு மடமயில் செங்கோ செங்கீரை
சிரபுரம் வருகவு ணியமணி புகழனே செங்கோசெங்கீரை

வேறு.

கக. தானதன தந்தான தானதன தந்தான தானதன தந்தானனு

வீசுதிரை யம்போதி யீனுமமு தம்போல வீணையினெ மூங்கீதநீள்
வேல்விழியர் தம்பாடலாடலுந கர்ந்தாசை மேவியவ சங்கூரவே

மாசறுத வஞ்சேர்வி யாழன்வர வுந்தேர்கி லாவமரர் தங்கோவினீள்
வாழ்வதப வுந்தீய ஞலொரும கங்கூட மாசுடைய னெஞ்சாரவே
யாசுரர்க ளின்பாகு மாறுசெயல் கண்டேகொல் பாவமிகு
வன்பாகியே
யாகமுழு தும்பார்வை யானைமிக வும்சிறு மார்துயர் கடிந்தேநல்வாழ்
வாசறுவ ரங்கோடி வீசிறைவ ரன்பாமி னுடியருள் செங்கீரையே
யாரமலி யுங்கூடல் வாழவரு பைந்தோகை யாடியருள் செங்கீரையே.

உ0. கோடுதலில் செங்கோன்மை நீடுசெழி யன்காதல் கூரநட
னந்தேறுநாள்
கோமளமி கும்பாத மோடுடல்ப டும்பாடுகோணமிலு ளந்தேறியே
வாடுமுயி ருய்ந்தேநல் வீடுபெறு கென்ருசை மாதுமைக
ணின்பாகவே
மாமறையி னுந்தேர்கி லாதகழ லொன்ருலெநாளுநட னந்தேவரீர்
நீடுமுல கங்காண வாடுதலொ ழிந்தேமு னேருமுறை யின்ருகவே
நீரடிக ளின்ருேடுமாறிடுவி ரென்ருேது நேசனன்ம னம்போலவே
ஆடல்புரி யுந்தேவ ஞருள்பெ றும்பாவை யாடியருள் செங்கீரையே
ஆரமலி யுங்கூடல்வாழவரு பைந்தோகை யாடியருள் செங்கீரையே.

உக. ஊழிதொறு யர்ந்தேறு மாகடல மூந்தாத வூரெனமி குங்காழியா
ரூதியமெ னும்பாலன் வாய்மலர்த ரும்பாடலேறுவையை யின்பா
லெலாம்
வாழியவி ளம்பூவை யோடுகிளி யின்பாகு மாறுசொல நன்காரவமாய்
மாமயில்ப சுந்தோகை யேர்பெறவி ரிந்தாடுமாடமலி யுங்கூடலாய்
பாழியிலு றைந்தேபல் கேடுசெய மண்பேயர் பாழ்நெறிதொ லைந்தோ
டவே
பார்மிசைவ ரும்பானு சீர்பரவு பைங்கோதை பார்வதியு நன்பாலினும்
ஆழியவ னும்பாக மாமிறைவ ரன்பாமி னுடியருள் செங்கீரையே
ஆரணிபெ ருஞ்சோழ ஞருளி ளம்பாவை யாடியருள்
செங்கீரையே.

## ௩. தாலப்பருவம்.

௨௨. எண்ணுக் கடங்கா வுயிர்த்தொகைகள்
இருளா ணவத்தி லழுந்தாமே
எடுத்துத் துகளைத் துடைத்தருளா
மினிய வமுத நனியூட்டி
நண்ணற் கரிய ஞானவொளி
நல்கிப் பரம சுகவீட்டின்
நடுவே கிடத்தித் தாலாட்டு
நங்கை யெங்க ளங்கயற்கட்
பெண்ணுக் கினிய திருத்தொண்டு
பேணிப் புரியும் பெருஞ்செல்வி
பெருமான் வெண்ணீற் றொளிவளர்த்த
திருமா னேயங் நெடுமாற
வண்ணற் கினிமை தருமங்கைக்
கரசே தாலோ தாலேலோ
வபயன் றவத்தி லுதித்தசுவை
யமுதே தாலோ தாலேலோ.

௨௩. பொன்னாலியன்ற சிறுகலத்திற் புதியபனிநீருலை வாக்கிப்
புகறிறாள வரிசியிட்டுப் பொருந்தமணிக்க லுலையேற்றி
மின்னார்பவளத் தழன்மூட்டி மின்னேநீசெய் சிறுசோறு
விருந்தாயாங்களிருந் துண்டு மிகவுண்மகிழ்ந்தோம் போதாதோ
இந்நாழிகை செய் விளையாட்டுன்னிமைகள் சிறிதே பொருந்துதியா
லெங்கள்மணியே விளமயிலே இன்சொற்கிளியே வெழிற்
யன்னாய் மதுரைத் திருநகருக் கரசே தாலோ தாலேலோ [குயிலே
வபயன் தவத்தி லுதித்தசுவை யமுதே தாலோ தாலோலே.

உச. காதமணக்கும் பசுமஞ்சட் கலவை திமிர்ந்து நறும்பனிநீர்
கமழவாட்டிப் பொன்னினிழை கலந்தவுடுக்கை கைபுனைந்து
போதமணக்கும் திருநீறு பொலியப் பூசிக்கத்தூரிப் [பாலூட்டிப்
பொட்டிட் டருட்கண் மையெழுதிப் பொலம்பூணணிந்து
பீதமணக்குந் தொட்டிலிடைப் பின்னை வளர்த்துத்துயில் கென்றூற்
பெருமாட்டிகண் வளராமல் பேசிப் பொழுதைப் போக்குவதோ
சீதமணக்குஞ் சந்தவரைச் செல்வீதாலோ தாலேலோ
தென்னர்குடியை விளக்கவந்ததேவீ தாலோ தாலேலோ

உரு. கூரம்பனைய விழிமடவார் கொங்கைத் திமிர்ந்தநறுஞ்சாந்தங்
குளிக்கும்புனலிற்கலக்க வந்நீர் கொண்டுவிளைந்த தண்டுலமும்
சாரநிறைந்த பசுங்கரும்பும் தாழையிளநீர் குலைக்கமுகும்
தழைத்தகதலிப் பெருந்தாறும் தடத்திற்கிளைத்த பலமலரும்
நாரம்பயிலும் பலவுயிரும் நளிர்பூம்புனலை யருந்திமனை
நாடுமேதிகன்றுள்ளி நயந்து பொழிந்த தீம்பாலு
மாரங்கமழுந்தமிழ் மதுரைக்கரசே தாலோ தாலேலோ
வபயன் தவத்தி லுதித்தசுவை யமுதே தாலோ தாலேலோ

உசா. குன்றமடக்கிக்கடல் குடித்த குறுமாமுனிவன் குடியிருக்கும்
குளிர்பூஞ்சந்தவரைப் பிறந்து குமுதநீலங் கோகனக
மன்றன்மணக்கும் தடம்பொய்கை மலிநீர்தோய்ந்து வானளக்கும்
மதுவார்சோலை தொறுந்தவழ்ந்து மாரன்றனக்குத் துணையாகி
மன்றஞ்சதுக்க மாளிகைகண் மாடகூட மறுகெல்லாம்
வம்புமலிந்து மாந்தர்களை மலியுங்காமப் போர்க்குய்த்துத்
தென்றனடக் குந்தமிழ்மதுரைச் செல்வீதாலோ தாலேலோ
சிவனார் நீற்று நெறிவளர்த்ததேவீ தாலோ தாலேலோ

உஎ. வேறு.

இளவெயில் விரியுந் தளிர்நிகர் மேனி யெந்தாய் வாடாதோ [தோ
எழின்மதி யனைய குளிர்முகம் வேர்வை யெழுந்தே சோரா
உளமது கனிய முலைதரு தாய்மா ருன்மேற் சீறாரோ
ஒளிர்பொனி னிழைசேர் சிறுதுகில் புழுதி யுற்றே பற்றாதோ
வளர்வர்த முயிரே யனவிள மயிலே மண்ணா லாஞ்சோறா
வளமனை புகுவார் நுகர்வது சிறிதே மைக்கண் டுயிலாயோ
தளவினை முனியுந் தரளவெ ணகையாய் தாலோ தாலேலோ
தமிழ்த்தழை மதுரா புரியவ ரிறைவீ தாலோ தாலேலோ.

உஅ. கோதறு கழையி னூறிய சாறே கொள்சா றாறுசுவையே
குடைதலின் மணியே மணிமிளி ரொளியே குளிர்தென் றிசை
தீதறு குழலின் யாழினி னிசையே செந்தமி ழின்கவியே [வளியே
திகழ்கவி தனிலார் சுவையினை நிகர்வோய் தேமலர் மணநேர்
மாதவ முயல்சீர் வளவர்கண் மணியே மழைதரு கற்பரசே [வோய்
மங்கைய ரரசே யெங்களி னுயிரே மடமா னீதேனார்
தாதகி புனைவார் திருவருள் வடிவே தாலோ தாலேலோ
தமிழ்த்தழை மதுரா புரியவ ரிறைவீ தாலோ தாலேலோ.

தந்தன தனனா தந்தன தனனா தானா தானனா

உகூ. நந்தெறி கடல்வாய் வந்ததெ ளமுதே நாணா மாறேசீர்
நந்தலில் சுவைவாய் செந்தமிழ் நலமா ரார்வார் பாலேநேர்
வெந்தவெ ளொளிநீ றுந்தமொ ணுதன்மேன் மேவா மாசோவா
வெம்பவ மொழிமா றெந்தையி னருடான் மேனாள் சேர்வாரார்
அந்தமி லடியார் தம்புக ழறிவா ரார்தா மாயேநீ
யம்புவி யதன்மேல் வந்திலை யெனினே வானார் தேனோர்நீள்
சந்தன வனமே வுந்தமிழ் மலையாய் தாலோ தாலேலோ
சங்கர ரருள்சேர் மங்கைய ரரசே தாலோ தாலேலோ.

௩௰. பண்பக மருவா வெஞ்சமண் மிகையார் பார்மே னீடாமே
பைந்தமிழ் வளநா டும்புரை நெறிசார் பாயே வீடாமே
வெண்கதிர் மரபார் சுந்தர னருடா மேவா ராகாமே
வெங்கலி மிகையே பொங்கியி வுலகோர் வீணே மாயாமே
மண்பொலி வுறவே தண்புன னிலமேல் மாதா வேநீதான்
வந்தனை யெனவே யன்பர்க டொழுசீர் மானீ மாநீரார்
தண்குயி னிரைசூழ் செந்தமிழ் மலையாய் தாலோ தாலேலோ
சங்கா ரருள்சேர் மங்கைய ராசே தாலோ தாலேலோ.

௩௧. வேறு.

பய்புந்தி ரைக்கயமி லங்குசெவ் வாம்பலம்
பனிமலர் மிசைந்தகாரான்
பைங்கன்றை யுள்ளிப் பொழிந்ததீம் பாலுண்டு
பவளவாய் வெள்ளோதிமம்
அம்பங்க யத்தொட்டி லிட்டபார்ப் புத்துயில
அலையசைத் தாட்டவன்பா
யங்குறு பசுந்தவளை தங்குமெல டுத்தாரொ
வாரோவெ னத்தாலிசை
கம்புங்க வைக்கால ஞெண்டுங் கருங்கெண்டை
யுஞ்சேலும் வாளையுஞ்சேர்
கடிவயல்கள் புடைசூழு மதுரையம ரங்கயற்
கண்ணரியரு ணண்ணுமயிலே
சம்பந்த நம்பிக்கொர் தாயான மடமானி
தாலேல தாலேலவே
சைவந் தழைக்கவருள் செய்ம்மங் கையர்க்கரசி
தாலேல தாலேலவே.

## ௪. சப்பாணிப்பருவம்.

௩௨. பூவாத புண்டரீக வுரியாடை யரையிற்
பொருத்தித் துருத்தியுலையிற்
பொருந்தாத மாதங்க வாடைமேற் போர்த்தாவி
பொன்றினவ ரக்கணிந்தும்
ஓவாத கத்தினினைத் துருகு பத்தர்குழு
வொளிருமா தங்கவுடையே
யுடுத்தமுது துய்த்துவகை பெற்று மகிழும்படிக்
குதவு பெருமானடிகளே
மாவாத ரத்தொடு வழுத்துமகி யன்னைதன்
மணிவயிற் றுற்றஞான்றே
வாய்த்த பெருமாட்டியரு ளாட்டிமரு ளோட்டிநெறி
கூட்டியெமை வாழவைக்குந்
தாவாத கருணைவடி வுடையமங் கையராசி
சப்பாணி கொட்டியருளே
சைவநெறி தழையவரு தெய்வமட மயிலினிது
சப்பாணி கொட்டியருளே.

௩௩. கொண்டலன கூழைமுடி கூடாது காதிற்
குதப்பைகள் பொருந்துறாது
குமுதமல ருறுதரள நிரையனைய முறுவல்வாய்
கொள்ளாது குதலைமொழியும்
விண்டிடவு மறியாது சிறுமியர்க டம்மோடு
விளையாடு சிறுகாலையே
வெண்ணீறு சண்ணித்த நுதலடிய ரைக்காணின்
மெய்யன்பி னோடுதாழ்ந்து

புண்டரிக மலரனைய திருவடிகள் கழுவியலர்
புதுமலர்க டூவியெளியேம்
புன்மையொழி யச்சிறிது திருவமுது செய்தருள்க
புண்ணியர்க ளென்னவூட்டித்
தண்டரள மொடுமணிகள் தரவும்விழை செங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
சைவநெறி தழையவரு தெய்வமட மயிலினிது
சப்பாணி கொட்டியருளே.

௩௪. ஈனமிகு வறுமையொழி தரவிழை வினொடுவந்த
விரவலர்க ளிதயமகிழ
வேழிசையின் மரபுதெரி பாணர்குடி தழையவிமை
யவரமிழ்த மனையதமிழின்
நூனய மறிந்துபிர சங்கமழை பொழியவல
நோன்மைகெழு நாவலோரும்
நுண்பொரு டதும்பிட நறுங்கவி நினைந்தளவில்
நுவலவல பாவலோரும்
ஞானநெறி பேணுமறை யாளர்களும் வாழவுமை
நாதனடி யார்குறைவற
ஞாலமிசை யெண்ணான் கறங்களும் விளங்கவு
ணயந்துதின மளவிலாத
தானமழை பொழியவல பங்கயச் செங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
சைவநெறி தழையவரு தெய்வமட மயிலினிது
சப்பாணி கொட்டியருளே.

௩௫. கார்மேக மனையகுழன் மீதே மலர்க்கணுறு
களிவண்டி னங்களார்ப்பக்
கயலனைய விழிமலரி லொழுகருளை னறவனையர்
கண்வண்டு மொண்டுளார்ப்ப
வார்காதி லசையுமொளி வயிரநில வமுதுண்டு
மகிழ்ச கோரங்களார்ப்ப
மார்பிலணி பரிதியொளி மணியார மும்முத்து
மாலையொளி தானுமார்ப்ப
ஏர்மேவு செங்கர மலர்ப்பங்க யத்திலுறு
மெழில்வண் டினங்களார்ப்ப
இகபர மிரண்டினிலு மெம்மனைய ருக்கினரு
ளீந்துதவி செய்யவினையில்
சார்பாகி நின்றமங் கையபாசி செங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
சைவநெறி தழையவரு தெய்வமட மயிலினிது
சப்பாணி கொட்டியருளே.

௩௬. வண்மைமிகு மலைகடன் முகந்துமுகில் ஓவாது
மாதமும் மாரிகொட்ட
வளவயலில் விளைபயனை யிரவலர்க் கீந்தபின்
வளமனையி லுழவர்கொட்ட
வொண்மைமிகு பொற்றிரளை யளகையதி பதியனைய
வுயர்வணிகர் பெரிதுகொட்ட
வோவாமல் யாவர்க்கு மீயுமன் னவர்மனையில்
ஓசைமிகு பேரிகொட்டக்
கண்ணுத றிருக்கோயி றொறுமுழவு கொட்டக்
கருங்கயற் கட்பவளவாய்க்

கற்புமிகு காரிகையர் வாழ்கன்னி நாடாண்ட
கற்பகப் பூங்கொடியுநின்
தண்மைமிகு பங்கயச் செங்கைகொடு மகிழ்வோடு
சப்பாணி கொட்டியருளே
சைவநெறி தழையவரு தெய்வமட மயிலினிது
சப்பாணி கொட்டியருளே.

௩எ. வண்டுபடு தண்டுளப மாலையணி மாலமிகு
மாலயுடை யானென்னவே
மருவியரி கானேயருள் புரகானே யெண்கானே
மாசில்சங் கானேயுன்னித்
தொண்டுபடு பெருமைபெறு மடியர்குழு விவணுறுக
தொல்லைமிகு முலகவாழ்வைத்
தொலையாத தெனவெண்ணி நிலையாத செயல்பண்ணு
துட்டக் குரங்குபோல
மிண்டுபடு மனமூடர் போமின்க ளெனவே
விளம்புங் குறிப்பாகநல்
விகசிதவொண் மணிகளிமை பொன்வளைகள் கலகலென
மிக்குலவி யார்ப்பவங்கை
தண்டாள வெண்கவிகை வளவர்தவ மகளினிது
சப்பாணி கொட்டியருளே
சைவநெறி தழையவரு தெய்வமட மயிலினிது
சப்பாணி கொட்டியருளே.

௩அ. வேறு.

தேனி னொழுக்கென வார்ந்த
நரம்புக டிகழ்யா ழினிலிட்டுச்

செந்நெறி நின்ற பெரும்பா
ணர்க்குஞ் செயல்செய வரிதாக
ஏனைய பாணர்க ளுண
முனுளினில் யாழ்மூ ரிப்பண்சொற்
றிசைவடி வாகிய விறையவர்
பெருமையை யிருநில முழுதுணா
வானிவர் செறிபொழில் சூழ்தரு
மையினில் விளக்கிய மணிவாயான்
மாகடல் மீதி லுகக்கடை
நாளில் வயங்கிய தோணிபுரர்
கோனிசை பாடற் கொற்றிய
தெனவே கொட்டுக சப்பாணி
கொங்கு மிகுங்குழன் மங்கைய
ரசே கொட்டுக சப்பாணி.

௩௯. பச்சைமின் கொடியோ டுற்றொரு
மறையோர் பாலக னுக்கமுது
பாலித் தருளிய நீலக்
களவிறை பாதப் பணியாளர்
இச்சை வழிப்படி யுற்றரு
டாலுக் கெண்ணில வாங்கரிக
ளிச்சக மீதி விருந்துந்
தெளியா ரிச்சக மேபேசி
வச்சைய ரைப்பின் சென்றலே
யும்புன் மதிமாந் தர்க்கண்டே
வம்பே தோன்றி மறைந்தன
ரென்றுள் வருந்துங் கருணையினுய்

கொச்சையர் காவலர் மெச்சிய
தாயே கொட்டுக சப்பாணி
கொங்கு மிகுங்குழல் மங்கைய
ரசே கொட்டுக சப்பாணி.

சா. குணில்பொரு முரசங் கடலென
வார்ப்பக் குஞ்சர முந்தேருங்
குரகத முங்கொண் டெதிர்பொரு
வடவர்கள் கொடிகுடை விருதெல்லாம்
துணிபட வுடலஞ் சல்லடை
போலத் துளைபட வறுதலைகள்
தொடிபடு கையினி லுறுபேய்
மகளிர் துணங்கை யிடச்சமனும்
தணிவறு சீற்றங் கண்டுகண்
மூடச் சயமகள் கொண்டாடத்
தடவரை போலுந் திண்சிலை
நெல்லைச் சமரிடை கைக்கொண்ட
குணவரை மாறற் கமுதன
மானீ கொட்டுக சப்பாணி
கொச்சையர் நாதன் மெச்சிய
தாயே கொட்டுக சப்பாணி

சக. தனதன தனதன தனதன தனதன தத்தனதத்தான.

அயன்மன திலுமெழு தரியந
லெழின்மிகு மற்புத பொற்பாவாய்
அணிமக ளிர்கள்விழை நலமுழு
வதுமமை வுற்றிடு நற்றேகாய்

மயலெனு மிருளிரி தரவெம
துளமனை வைத்த மணிச்சோதீ
மனமகிழ் தாமுலை தருமனை
விழியளி துய்த்த சுவைத்தேனே
செயமிகு கவுணியர் தலைவனை
மகனெனல் பெற்ற தவத்தாயே
சிவநெறி தழையவி வுலகினி
லுருவொடு தித்த தவப்பேறே
குயவரி யமர்கொடி வளவர்க
டவமகள் கொட்டுக சப்பாணி
கொழிசுவை மலிதமிழ் மதுரைய
ரிறைமகள் கொட்டுக சப்பாணி.

## ரு. முத்தப்பருவம்.

சஉ. வேண்டியவை வேண்டிய விதத்தினருள் பரமனருள்
மேவியலை வேலைசூழ்ந்த
மேதினி யனைத்தும்வெண் மதிக்குடையி னீழலில்
விளங்கப் புரந்துவலியா
லீண்டிய நிதிக்குவை யகத்துக் கரந்தணுவு
மீயாது வைத்தமேரு
வேங்கிடச் செண்டா லடித்துத் திரித்தெடுத்
தியாவர்க்கு மீந்தெவர்க்கும்
பூண்டிடற் கரிதினிந் திரனிட்ட வஞ்சனைப்
பூணா மார்பமேந்திப்
போரிலவன் மணிமகுடம் வீழவளை வீசிநற்
பொன்றுத புகழ்படைத்த

பாண்டியர் குலஞ்சமணில் வீழா தளித்தமயில்
பனிவாயின் முத்தமருளே
பங்கயத் திருவினுயர் மங்கையர்க் கரசியொளிர்
பவளவாய் முத்தமருளே.

௪௩. அகரமொரு நூறு யிரஞ்செய்து வேள்விபயி
லந்தணர்க் கீவதனினு
மாலயஞ் சிகாமுள வாகவொரு நூறு
யிரஞ்செய்வ தனினுமானர்
நிகாறுபொ னடிமலர்க ளகமலரில் வைத்தேத்து
நியதிதவ ரூததொண்டர்
நீள்பசிக் கொருவேளை யுணவுதரு வதனுக்கு
நிகரில்லை யென்பதோர்ந்து
புகாறுமெய் யன்பர்வர வெதிர்கொண் டழைத்தடிகள்
போற்றியுண வாடையணிகள்
போதுமென வுதவியிவ ணீயிர்வர வெமதுகுடி
புண்ணியம் பண்ணியதெனப்
பகாழகு மிகுநறவு பொழிகுமுத மலரனைய
பனிவாயின் முத்தமருளே
பங்கயத் திருவினுயர் மங்கையர்க் கரசியொளிர்
பவளவாய் முத்தமருளே.

௪௪. முடைநாறு புலைமேனி கழுவாத கொடியமன
மூடவமணுத்தர் குழுவான்
முத்தமிழ்த் திருநாடு மங்நாடு காவல்செயு
முடிமாற னுஞ்சமணுறீஇச்
சடைநாறு மிதழிபுனை யிறைநெறி மறந்தறிவு
சாம்பிக் கிடத்தல்கண்டு

தரியாம லளவரிய வருளா லநாடுமறை
சமணிரு ளகற்றவேண்டிப்
புடைநாறு சோலைமலி புகலியர் தவப்பெரும்
புணரியி லுதித்தஞான
போனகப் பரிதியை யழைத்துவரு கென்றன்று
போதமலி தூதுவர்கள்பான்
மடைநாறு தேமலர் விரிந்தென மொழிந்தநின்
மணிவாயின் முத்தமருளே
மங்கையர்க் காசியே யெங்கள்குல தெய்வமே
மணிவாயின் முத்தமருளே.

௬௫. தெண்ணிலவு பொழிமதிய நிலமீது வந்தெனத்
திகழ்முத்து மானமூர்ந்து
சிவஞான சம்பந்தர் வருமா றறிந்தறிவு
தெளிகுலச் சிறையைநோக்கி
யுண்ணிலவு மகிழ்கூர நீரிங் கெழுந்தருள
வுய்ந்தன மெனப்புகன்றே
யுற்றெதிர் கொளச்சொல்லி யுய்த்தவ ரழைத்துவா
வோங்கிய திருக்கோயிலிற்
கண்ணிலவு பயனுற்ற தென்னவத் திருமறைக்
கன்றினைக் கண்டுச்சிமேற்
கைத்தளிர் புனைந்தடி பணிந்துவிழி நீர்மிகக்
கருத்துமுற் றியமகிழ்வொடும்
பண்ணிலவு மொழிகுழற யாஞ்செய்தவ மேதெனும்
பனிவாயின் முத்தமருளே
பங்கயத் திருவினுயர் மங்கையர்க் கரசியொளிர்
பவளவாய் முத்தமருளே.

சசு. கண்டியா முட்டுற்ற மென்றமண ருளறவக்
கைதவன் கேட்டுமுட்டுக்
கதுவிய தினிப்பொடிய னில்லாம லோடக்
கடுந்தழன் மடத்திடுமெனத்
தண்டனை யவற்காக ஞானமக வேவுதழல்
சார்ந்துடல் வெதுப்பநைந்து
சமணரா லொழியாமை கண்டுமன் னவன்மனச்
சம்மதத் தாலமறையோர்க்
கண்டடி பணிந்தைய வந்தாசன் வெஞ்சுரங்
கழிவித்து மமணழித்துங்
காத்தருள்க வென்றிரந் தவர்சம் மதிக்கக்
கடற்கொத்த பேருவகையால்
பண்டியாஞ் செய்தவப் பேறுளோ மென்றநின்
பனிவாயின் முத்தமருளே
பங்கயத் திருவினுயர் மங்கையர்க் கரசியொளிர்
பவளவாய் முத்தமருளே.

வேறு.

சஎ. தனன தனன தனன தனன தனன தனன தத்தன.
தனித வுவரி மருவு முயிர்க
டருப லொளிய முத்தமே
சயில மருவு கரிய ரிபணி
தருந கைமலி முத்தமே
கனித ருகமு குறுசு வைமலி
கழைநெ லின்விளை முத்தமே
கருமு கில்குரு கொளிர்ம திகடி
கமழ்ம லருறு முத்தமே

நனித மனதி னசையு நர்கொள
நவையி னவவை யிச்சியேம்
நளின வதனி குமுத மலரில்
விளைத ளமு ணச்சினேம்
புனித வளவர் சிறுமி யருள்க
பொருவி னினிது முத்தமே
பொதிய வரசி யருள்க நினது
புதிய துகிரின் முத்தமே.

சஅ. தானதனன தானதனன தானதனன தத்தன.

மாலிபமறை சாலியின்விளை
வார்கதிர்தரு முத்தமும்
வாலுளைமலர் நீள்கழைவெடி
வாயுறுகதிர் முத்தமும்
சாலவுமுயர் பாகினில்விளை
தாவறுகதிர் முத்தமும்
தாமரைதழை வாழையில்விளை
சாலொளியுறு முத்தமும்
வேலிணைவிழி மாதர்கண்மிடி
மேவுமிரவலர்க்களி
மேவியுதவு கூடறழைய
மேவியவொளிர் பொற்கொடி
மாலினுமிகு சீர்வளவர்கண்
மாமகளருள் முத்தமே
மாநிலமிசை நேருமட
மானியருள்க முத்தமே.

௪௬. வேறு.

எத்து குணக்கா மக்கிழத்தி
யீன்ற சிறுவர் நவமணிக
ளிழைத்த முடியுங் கருவூலத்
திருந்த மணியுங் கவர்ந்தேக
மெத்த வருத்த மெய்தியநல்
வீரபாண்டி யன்குலச்சேய்
மிக்க மகிழ்ச்சி யுறவணிக
வேடம் புனைந்து வித்துருமம்
தத்து மொளிச்செம் மணிவயிடூ
ரியந்தண் வயிரந் தழைப்பச்சை
தமநேர் நீலங் கோமேதந்
தழைத்த புருட ராகமொடு
முத்தும் பகர்ந்தார் திருவருள்சேர்
முத்தே தருக முத்தமே
மூவா மதுரை நகர்க்கிறைவி
முத்தந் தருக முத்தமே.

௫௰. கத்துங் கடனித் திலமணலாக்
கருதிப் பாவை நல்லார்கள்
கலியா ணஞ்செய் துளமகிழுங்
கவினூர் நல்லூர்ப் பெருமணத்தில்
தத்தம் விழிசெய் தவப்பயனாற்
சார்ந்தோ லெல்லாம் பெறுமாறுஞ்
சமணு ருள்ளஞ் சமழ்த்தாணை
சாய்ந்த தென்று தளர்வுறவும்

மித்தை யுலக விருப்பகழ்ந்து
மெய்யன் பாரீர் மிகப்பாய்ச்சி
மேன்மைப் பத்தி மனவயலில்
விதைப்பார் தமக்கே விளைபயனும்
முத்தி யளித்த சேய்தாயாம்
முத்தே தருக முத்தமே
மூரிக் களிற்றுச் சோழர்மகள்
முத்தந் தருக முத்தமே

௫௧. ஒழியா வின்ப வாரிதியெம்
மூளத்திற் றேக்கும் பெருமானுக்
குண்ணக் கடுநஞ் சினையளித்த
வுததி பெறுமுத் தினைவேண்டேம்
பழியாம் வகையெம் பாமன்மேற்
பாணந் தொடுத்த மதன்சிலையிற்
படுமுத் துவவேம் களிறிரண்டின்
பணைமுத் திச்சி யேமன்று
தெழியா வருங்கூற் றினையுதைத்த
திருநெல் லையின்வேய் முத்தையுளஞ்
சேர்த்த முத்தே நின்பவளச்
செவ்வாய் முத்தே விருப்பானேம்
அழியாப் புகழ்சேர் மங்கையருக்
கரசே முத்த மருள்கவே
அருகா சனிக்குப் பால்சுரந்த
வமுதே முத்த மருள்கவே.

## ௬. வருகைப்பருவம்.

௫௨. செவ்வலங் கொளிதவழ் பதத்தா மரைக்கணூறு
செஞ்சிலம் பரியொலிப்பத்
திருவரைப் பைந்துகிலின் மிசையசைத் திட்டவொளி
திகழுமே கலைவிளங்க
எவ்வுலக மூங்தொழுஞ் சிரபுரக் குழவிசெய
விருசெவியி லுற்றகணமே
யின்பால் சுரந்தபுக ழேய்ப்பமுத் தாரங்க
ளெழின்மார்ப மீதிலசையப்
பவ்வம்விளை யாதசெந் துகிரிதழி னடுவண்வெண்
பண்முத்த வொளிகுலாவப்
பங்கயச் செங்கணருள் வெள்ளம் பாப்பநுதல்
பானீற்றி னொளியெறிப்ப
மவ்வலங் குழன்மீது மணிமுடி யிலங்கவிவண்
வந்தருள்க வந்தருள்கவே
மாடமலி கூடனகர் வாழ்மங் கையர்க்கரசி
வந்தருள்க வந்தருள்கவே.

௫௩. திருவடியி லுற்றழகு பெற்றமணி நூபுரச்
சில்லரி யினோசைபயிலச்
சிறையோ திமந்தொடர மடநடை விழைந்துபிடி
சேவடி தொடர்ந்துவரவே
மருவடிவின் மென்சாயல் கற்கக் கலாபமயி
லாசைகொடு தொடரவளைக
ளார்க்குங் கரப்பங் கயக்கொடைவிருப்பி விண்
ணுமிரு நிதியும்வரவொண்

பருமுத்த முறுவனில வுண்ணச் சகோரம்
பறந்துவர நீபணிக்கும்
பணிவிடை புரிந்தருள் படைக்குமா தாவரம்
பையர்கள்குழு வுந்தொடரவே
மருவடி பசுந்தே மலர்க்கூந்த லம்மையிவண்
வந்தருள்க வந்தருள்கவே.
மந்தமா ருதவள மிகுந்தமா மதுரைவளர்
மங்கைநா யகிவருகவே.

௫௪. தனுகரண புவனபோ கந்தரும் தெய்வமிகழ்
சாருவா கனுமுதித்துச்
சாகின்ற பேர்கடமை யேதெய்வ மென்றுவாய்
சாதிக்கு மூடனுமறை
பனுபிரம நாமே யெனச்சொல்லி யுடல்பாழ்
படுத்துமா யாவாதியும்
படிவில்வழி படுதலிகழ் சிறுமதியு முதலாய
பதகர்மறை நெறியினிறுவி
யனுதினமு மானவழி படுமெங்க ளுள்ளமா
மாலயத் தைச்சிதைப்பான்
ஆரவா ரித்துவரு கின்றன ரெமக்குன்பொ
னஞ்சரண நெஞ்சரணமே
மனுமா புதித்தமயி லேகாத்தருட் செய்திட
வந்தருள்க வந்தருள்கவே
மந்தமா ருதவள மிகுந்தமா மதுரைவரு
மங்கைநா யகிவருகவே.

௫௫. ஊனினை நுகர்ந்துன் பெருக்குத றகாதென
வுணர்ந்தும் பிறர்க்குரைத்தும்
உரவுத் திரைக்கழிக் கரைமீன் கவர்ந்துண்
டுயிர்க்குறுகண் செய்யாமையே
தானிணையி றவமென்று பேசியுந் தம்முடற்
றழல்போற் சுடும்பாறைமேற்
றுமே கிடத்தியுந் தலைமயிர் பறித்துந்
தமக்குறு தவர்தமையெலாம்
நானிலத் தோரஞ்சு மாறுபடு கொலைசெய்ய
நாணாத சமணர்குழுவெண்
ணாயிரவ ரார்த்துவர ஞானசம் பந்தரு
ணடுங்கேலொர் பாலனென்றே
மானினேர் விழிமாத ராயென்ற பாடல்பெறு
மடமானி வந்தருள்கவே
மந்தமா ருதவள மிகுந்தமா மதுரைவரு
மங்கைநாயகி வருகவே.

௫௬. கொடுத்தலுங் குறையாது கொள்வதூஉ மிகையாது
கோதிலா வாணிபத்தாற்
குறைவறத் தேடியத னிதியெலாந் தங்கைபெறு
குமரனுக் கெனவமைத்தே
வடுத்தவிர் மகப்பேறு மறுபிறப் பினிலேனும்
வாய்க்கத் தவஞ்செயச்செல்
வணிகன்றன் ஞாதியர்கள் சிறுவன்ற னிதியெலாம்
வலிந்துகைக் கொள்ளவின்றுள்
அடுத்ததுயர் கண்டுசபை யார்கண்முன் வணிகவுரு
வாகிவந் தேவழக்கை

ஆதாத் தொடுகூறி வென்றுசிறு வன்றுய
ராறுத்தசொக் கேசாருளே
மடுத்திவுல குய்யவென வளவர்குடி வந்தமகள்
வந்தருள்க வந்தருள்கவே
மாமதுரை யாளுநெடு மாறனுயிர் பேணியவள்
வந்தருள்க வந்தருள்கவே.

ருஎ. வேறு.

முற்றுங் கரும்பைத் தடிந்துழவர்
முழங்கு மாலை யினிற்பிழிந்து
முகந்து சாற்றை யடுங்காலை
முகில்போ லெழுந்த கொழும்புகையும்
சுற்றுங் கருவண் டினமோடச்
சுரிமென் குழலீ ரம்புலர்த்தும்
தோகை யனையார் சந்தனத்தின்
றுகளால் விளைக்கு நறும்புகையும்
கற்றுங் கேட்ட மறையோரா
குதியின் புகையுங் கழனியெலாம்
களுலச் செந்நெல் கரும்பென்னக்
கன்னல் கமுகென் றுழவரலான்
மற்றுள் ளவர்க டடுமாறும்
வளநாட் டிறைவீ வருகவே
மதுரம் பழுத்த தமிழ்தழைத்த
மதுரைக் கரசீ வருகவே.

ருஅ. வான மசையுந் துகிற்கொடியார்
மாடத் தசையு நகிற்கொடியார்

மருங்கு னுடங்கல் கனமின்னும்
வருந்திப் பயிலும் தினமின்னும்
கான வினிமைக் ககநெகிழ்வ
கமழ்செம் பிரசங் கரும்பிரசம்
கண்ணுங் குழலுங் கண்டஞ்சுங்
காமன் கணையஞ் சும்மஞ்சும்
கூன விளவெண் பிறைநுதற்குக்
கூசி யிரவே வெளித்தோன்றும்
கூட னகரே துறக்கமதிற்
குலவு பவரே தேவரென
மான வியல்வல் லவர்புகழும்
மதுரைக் கிறைவீ வருகவே
மதுரம் பழுத்த தமிழ்வளர்த்த
மங்கைக் காசீ வருகவே.

ருகூ. குன்ற மெறிந்த குமாவேள்
குடிமே வியசீர்ப் பரங்குன்றிற்
குலவு மானெல் வயற்பாயக்
குவளை குதட்டுங் கார்மேதி
யன்றிக் குதித்துச் சுனைபாய
வாங்கு வாழும் வாளையெதிர்த்
தயல்சூழ் பொதும்பர்ப் பாய்ந்திடலா
லடர்ந்த மாவி னறுங்கனிகள்
துன்றி வீழ வயற்கயல்கள்
துள்ளிப் பாயச் சுனைக்குவளை
சுரும்பு விரும்ப முறுக்கவிழ்ந்து
ஊத்தேன் பாயுங் கூடனகர்

மன்றின் மாறி யாடுகழல்
மன்னு மனத்தாய் வருகவே
வளவர் செழியர் குடிதழைய
வந்த மானீ வருகவே.

சுய. மூல மலமாஞ் செறியிருளும்
மோக மதமா வுஞ்சினமா
மூரிப் புலியுங் காவாவு
மொய்த்த பெருங்கா டெமதுள்ளம்
சால விசையா துறலென்னச்
சாற்றே னின்னீற் றொளியுமிடை
தனையுங் கருணை பொழிவிழியுஞ்
சாய றனையுங் காணிலவை
ஓல மோல மென்றஞ்சி
யோடா துறுமோ வாடாச்சீர்
ஒளிமா மணியே சுவையமுதே
யுலவாப் புகழுக் குறைவிடமே
மாலை நிகர்செம் பியனிருகண்
மணியே வருக வருகவே
மதுர மிகுந்த தமிழ்தழைந்த
மதுரைக் காசீ வருகவே.

சுக. வேறு.

தந்தன தானன தந்தன தானன தந்தன தானன—தனதன.

பொங்கிய வாருயி ரின்புறு
மாறுபொ ழிந்திடு நீடருண் முகிலமே

புன்சொலு ருமல்வி ளங்கிய
மாகவி யின்கணி லாவிய மதுரமே
அங்கையின் மான்மழு வன்கழ
லேதொழு மன்பர்க டேடிய நிதியமே
அம்புவி மேவிய மன்பதை
யாவிகு ளிர்ந்திட வேவரு மதியமே
திங்களை நேர்தரு வெண்குடை
நீடிய செம்பிய ஞர்தரு சிறுமியே
செங்கயன் மேவுபொ லங்கொடி
மாறனு வந்தக ணேர்தரு தலைவியே
மங்கையர் நாயகி பங்கய
நேர்முகி யெங்கட மாருயிர் வருகவே
மஞ்சுகு லாவிய தென்பொதி
யாசல மன்றிரு நாடவள் வருகவே.

## எ. அம்புலிப்பருவம்.

சுஉ. தேஞர்ந்த திருவாத்தி மலர்சூடு நீண்முடிச்
சென்னியர் தலைத்தோன்றலால்
செகதலங் கண்டுவகை கூரவா னெறியிற்
செலுஞ்செயலி ஞலளிமிகக்
காஞர்ந்த செங்குமுத வாய்மலர்த் திடுதலாற்
கண்மலர் நுதற்கண்ணவர்
கழலடிக் கிட்டுவழி பாடுபுரி மாதவர்
கருத்தினி லுதித்தவதனன்

மீனூர்ந்த கொடியுடைய வேந்தனுக் கினியநல
மிகவுடன் கூடுவதனுன்
மேன்மைநில வுறலா லுனைத்தனக் கிணையென்று
விளையாடு மாறழைத்தாள்
ஆனூர்ந்த கொடியிறைவர் திருநெறி வளர்த்தவளொ
டம்புலீ யாடவாவே
அங்கயற் கண்ணியரு டங்குமங்கை யாரசொ
டம்புலீ யாடவாவே.

சுஙு. மூவுலகு மீரடியி னுலேய ளந்தருண்
முகுந்தற்கு மறைமுழுதுணர்
முளரிமல ருறைசது முகத்தற்கு மரியவடி
முடிகள்படு முதன்மையாலோ
பூவுலக மொருகுடையி னிழல்வைத் தளித்தசீர்ப்
பூழியர்கள் குலமுதல்வனும்
புண்ணியங் கருதியோ தெண்ணிலா வொளியினைப்
புனிதவெண் ணீறதென்றே
பாவரு புகழ்ப்புலவ ருக்கமு தளிக்கின்ற
பான்மையை யுளங்கருதியோ
பைந்தொடி நினைப்பொரு ளெனக்கருதி வாவென்று
பரிவோ டழைத்தருளினுள்
ஆவது நினக்குநலம் வேறுமுள தோகடுகி
யம்புலீ யாடவாவே
யங்கயற் கண்ணியரு டங்குமங் கையராசொ
டம்புலீ யாடவாவே.

௬௪. கலையா னிரம்பாத வெண்மதியை நீயிவள்
கலைகள்நிறை செம்மதியினாள்
களங்கமுளை நீயிவள் சரண்சேர்ந்த தொண்டருங்
களங்கமறு விப்பர்கண்டாய்
உலையா யிருந்தலையை மோதிச் சலித்தன்னை
யோவா தாற்றுவிப்பாய்
உலகிலுள வெவ்வுயிரு முள்ளுவகை துள்ளவிழி
யொழுகருளி மயிலளிப்பாள்
இலையான விரவலர்க ணீர்சொரிந் துள்ளுடைந்
தென்றுநிற் கச்செய்வைநீ
யிலனென்னு மெவ்வமெந் நாளுமுறை யாமலிவ
ளீந்தளிக் குங்கொள்கையா
ளலையாழி யமுதனைய வம்மைநிக ராவையோ
வம்புலீ யாடவாவே
யங்கயற் கண்ணியரு டங்குமங் கையாமசொ
டப்புலீ யாடவாவே.

௬௫. ஈரிரு மருப்புவெண் கயமூழ்கி முன்னையுரு
வெய்துபொற் பங்கயஞ்சே
ரிருங்கயத் தண்புனல் படிந்துனது வெங்கய
மொழிக்கலா மிங்கணுற்ற
சீரிலகு நற்சங்க முற்றியற் கலைநிறைந்
தேமதிய னெனவோங்கலாம்
சீறுமா வணுகாம லிவள்சாயன் மயிலாற்
றிகைப்பின்றி வாழ்வதுறலாம்
நோறு களங்கறுத் தானடிகள் வழிபட்டு
நின்களங் கறுத்துய்யலா

நெடுமாற னுய்ந்தாங்கு நின்கூ னொழிந்துட
னிமிர்ந்துமிகு புகழெய்தலா
மாரிரு முடிச்சென்னி யின்றமட மானியோ
டம்புலீ யாடவாவே
அங்கயற் கண்ணியரு டங்குமங் கையாரசொ
டம்புலீ யாடவாவே.

௬௬. கருணையா னினையன்னை வருகெனவும் வந்திலாய்
காரினத் தொடுகரந்தே
களங்கமுட் கொண்டுதிரி கின்றனைநல் லூதியங்
கைகழுவ விட்டலைந்தாய்
தெருணிறைந் தவர்களுனை முழுமதிய னென்பதும்
தெளிவுறு கலாநிதியெனச்
செப்பலுங் காராட்டை வெள்ளா டெனச்சொலும்
திறமாகு மிவள்சினந்தால்
பொருணிறை குபேரனெனு நின்வாழ்வு பொன்றுவை
புராரியடி யார்ப்பிழைத்துப்
பொன்றாது வாழ்பவர்க ளுண்டோ சமன்பட்ட
புன்மைநீ யறியாததோ
அருணெறிப் பயிர்தழைய வருமழையை யனையவளொ
டம்புலீ யாடவாவே
அங்கயற் கண்ணியரு டங்குமங் கையாரசொ
டம்புலீ யாடவாவே.

௬௭. தந்துணை பிரிந்துநீள் தமநீந்த
வறியாது தளர்வார்கள் சோரவந்தோ
தழல்வாரி நின்கரத் தாலிறைத்
தவராவி தளர்வுறச் செய்குவாய்நீ

அந்தமில் லாதபல வுயிர்கடமை
யம்மையிவள ன்னேபோன் மிக்கவருளா
லாதரித் தேயிம்மை மறுமைக்கு
நல்லதுணே யாவதறி யாதவரெவர்
பைந்திரைப் புணரிமிசை யுலகுபுகழ்
கதிர்வாப் பயந்தோடி மலேயுறைவைநீ
பரிதிமிகு புகழ்பெறப் புவிமீது
வருதவப் பாவையிவ ளாவதறிவாய்
அந்தரம் பார்க்கிலணு வாவைநீ
மேருவிவ ளம்புலீ யாடவாவே
அங்கயற் கண்ணியரு டங்குமங்
கையாரசொ டம்புலீ யாடவாவே.

சூஅ. மாதமொரு பத்துஞ் சுமந்துநொந்
தீன்றதன் மாதாவி னுயர்வழித்தும்
மறைமுழுது முணர்தந்தை யுயிர்வதைத்
தும்புவியில் வாழ்வோர்க ளெல்லாருமா
பாதக னிவற்காண லாகாதெ
னச்சொலும் படுபாவி யிங்கணுற்றுப்
பரிசுத்த ஞயினமை யுணர்வையன்
ருேகுருவின் பன்னிகற் பிணேயழித்த
தீதகல வெளிதாகு மரவின்வா
யுற்றநின் தீவிட மகன்றுபோமா
செய்யவல னிவடனயி மானபுத்
திரனிதுதெ ரிந்திலா யோபுகழ்மிகும்
ஆதவன் றிருமாபு தழையவரு
தவமகளொ டம்புலீ யாடவாவே

அங்கயற் கண்ணியரு டங்குமங்
கையாரசொ டம்புலீ யாடவாவே.

௬௯. **வேறு.**

செவ்வொளி வீசுஞ் சிந்தூர
மேவுந் திருமுக வெழில்கண்டே
திகழ்மதி யிதுகறை யிலதென
வுள்ளஞ் செறிதரு நாணாலோ
அவ்வொளி மதியைக் கவ்விய
பாந்தட் கருகுற லாகாதென்
றன்னிகர் குழலின் பின்னலை
யையுற் றஞ்சிய வதனாலோ
இவ்வயி னுற்றில னுண்மைதெ
ளிந்தா லின்னே யெய்திடுவா
னென்று மொழிந்தே கன்ற
றணிந்தே மினிநீ தாழாமே
மவ்வன் மலர்க்குழ லாளுட
னாடிட வாவா வம்புலியே
வளவர்க டவமக ளொடுவிளை
யாடிட வாவா வம்புலியே.

௭௰. உயர்வா னத்திடை யியல்வே
மிவள்சின முறுமோ வெனநினையே
லுறுமின் கோபம்வி னுறினுங்
கட்செவி யுலைவுற லறியாயோ
துயர்மா நிலமற நெடுவா
னிடை யுறு தூங்கெயி லைச்செற்ற

தொடித்தோட் செம்பியன் மகளிவ
ணின்னைச் செறலரி தாமோதான்
அயர்வா னீபா ணித்தனை
யெனினுறு மல்லல் கணக்கிலைகாண்
ஆனடி யவர்சின மொருசிறி
தெனினுமஃ தாரே யாற்றவலார்
மயர்வா சறுமட மானியொ
டாடிட வாவா வம்புலியே
வளவர்க டவமக ளொடுவிளை
யாடிட வாவா வம்புலியே.

எஅ. அலர்கதி ராயிர முடையவ
னள்ளி யருந்தி விடுத்தவிரு
ளாகிய மிச்சில் புசிப்பாய்
நல்லமு தாரநு கர்ந்திடலாம்
நலமிகு மூவர்க ளிசையமு
தோடரு ணண்ணிய நாவலர்சொல்
நற்றமி ழுஞ்செவி யார
மடுத்து ணயந்து மகிழ்ந்திடலாம்
பொலனறு மலருறு பொய்கையின்
மூழ்கிநின் பொல்லாக் கயநோயும்
பொன்னுந் தக்கனு மிடுசா
பங்களும் போயிறை யருள்பெறலாம்
மலர்வளர் திருநிகர் மானியொ
டாடிட வாவா வம்புலியே
வளவர்க டவமக ளொடுவிளை
யாடிட வாவா வம்புலியே.

## அ. அம்மானைப்பருவம்.

எஉ. குருமணி குயின்றவிர லாழிசெறி செவ்வொளி
குலாவியங் னங்கைகண்டு
கொண்டதே னுண்டுவரி வண்டுதுயில் கின்றவிரி
கோகனக மலரெனத்தாம்
பெருமகிழ்வி னெடுவீற் றிருக்கவந் தணுகியொளி
பெருகுமுக மதியைநோக்கிப்
பிறங்கிதழ்க் கதவுக ளடைத்தெமைச் சிறைசெயும்
போதி ருக்கினெனவே
கருதியுட னேவா னெழுந்துசெலும் வெண்ணிறக்
கவின்றெழி மங்கடுப்பக்
கன்னியம் புன்னைமலி கானலங் கடலில்விளை
கறையிலா நித்திலத்தா
லருமைபெறு கைவினை யமைந்துகண் கவருமெழி
லம்மானை யாடியருளே
யானடிமை தழையவொளி மிகுவளவர் தருபுதல்வி
யம்மானை யாடியருளே.

எங. விண்ணவர்க டருநாணு மாறீயு மங்கையொளி
மேவிச் சிவந்துமுன்கை
மேவுபொற் றொடியொளி படிந்துபொன் மையதாகி
வெங்குருவி னெங்குருபாற்
குண்ணெகிழ்ந் தமிழ்தொழுகு கொங்கையணி நித்திலத்
தொளியின்வெண் ணிறமடைந்திட்
டுவரிவிளை யாததுகி ரனையவித ழாற்பவள
வொளிமேவி யருணிறைகயற்

கண்ணொளி கலந்துகரு மையதாகி வெளியிற்
கலந்துநிற மற்றுலகினிற்
கட்டுண்ட காலத்தி னுலகியல்பு மிறையொடு
கலக்கினவ னியல்புமாகி
யண்ணுற்ற பொருளியல்கொ ளுயிரனைய தெளிபளிங்
கம்மானை யாடியருளே
யாரமண மேவுபொழில் சூழ்மதுரை யாளிறைவி
யம்மானை யாடியருளே.

எச. இன்னவுரு வென்றுசொல லாகாத தெளிபளிங்
கிடைகோங்க மனையநிறமா
ரெழில்மணியு மிருள்விரிக் குந்நீல மணியும்வெள்
ளொளியவயி ரமுமிரத்த
மென்னசெவ் வொளிமணியு முற்றவெழி லம்மானை
யேந்திழைநி னிதயகமலத்
தேடவிழ்த் தாறிரண் டந்தமுந் தாண்டிய
விடத்திலுறு மைம்முகவனைத்
துன்னுமல ரஞ்சலியி லேற்றூங்கு தாங்கித்
தொடங்குவழி பாடுமுற்றித்
துதிசெய்து மீண்டுமவ னுய்த்தாங்கு வீசியொரு
துகளிலா மலர்மடந்தை
யன்னதிரு வெழினலம மைந்தமங் கையாரசி
யம்மானை யாடியருளே
யமணவிரு ளகலவரு பரிதிபுகழ் கலபமயி
லம்மானை யாடியருளே.

எரு. கூன்பிறை மருப்பிருட் கரியமத மாவுலகு
குளிரவரு வெண்டிங்களங்
குடைமகர மார்துவச மலையாழி யொலிமுரசு
குளிர்தென்ற லந்திகிரியுந்
தான்படைத் தேகவுரி யற்கிணை யெனச்சொல்சித்
தசனையுமுன் வழுதிநாட்டிற்
றண்டுளி பெயாவகை புரிந்துவழு தியினோடு
சமருந் தொடுத்திரிந்த
வான்புரந் திடுமரசு மங்கையி லகப்படலு
மற்றவர் செருக்கழியுமா
வானத் தெறிந்தவச மாகியவர் நிலமேல்
வருந்தோறும் வீசுவதென
வான்பெய ரிராசிதொடு மாறெறிந் திருணீல
வம்மானை யாடியருளே
அரிபிரம ரறிவரிய ருறைமதுரை நகரிறைவி
யம்மானை யாடியருளே.

எசு. செம்பதும ராகவொளி யாலங்கை சேந்ததோ
செங்கைமலரொளி யின்மணிதான்
சேந்ததோ வெனவறியு மாறெறிந் தாங்குநின்
சீரொளி பாந்தாங்குமேர்
பப்புமித ழின்துவ ரறிந்துவரு மாறுபோம்
பான்மையென வும்பரிந்தோர்
பற்றிக்கொண் மின்னென வெறிந்ததென வும்பதும
ராகவ்வயி ரம்பழுதிலாச்

செம்பவள மம்பொனிவை யாற்றணித் தனிமையே
செய்தவைநின் னங்கைகொண்டே
திருவினொடு கலைமகளை யயிராணி தனையனைய
சேடியர்கள் கண்களிக்க
வம்பவள மனையசடை யையரருள் பெற்றமயி
லம்மானை யாடியருளே
யங்கணுல கங்கடொழு மங்கையர்க டங்களா
சம்மானை யாடியருளே.

எஎ. சேற்றிற் பிறந்துமட் டார்ந்துதிரி வண்டர்கள்
திளைத்தின்ப மாரவெளிதாய்த்
தினமுக மலர்ந்துமது வாய்சோர நின்றுபின்
சிலநாளி லெழின்மாய்ந்தொரு
கீற்றுப் பிறைநுதலி மேலிருக் கக்கீழ்க்
கிடக்கின்ற தவிசுமாகிக்
கீழ்மைபெறு முட்டாட் சரோருகந் தனதுசெங்
கேழொக்கு மெனினுமன்னர்
மாற்றற்ற பைம்பொன்முடி மீதுமல ருங்கழன்
மாறன்முடி மலருநின்கால்
வனப்பொவ் வுறுதுசெம் மணியங்கை மீதமா
வந்ததா லுந்துமாபோல்
ஆற்றவொளி வீசமேல்வீ சியொளிர் மாணிக்க
வம்மானை யாடியருளே
யமணவிரு ளகலவரு பரிதிபுகழ் கலபமயி
லம்மானை யாடியருளே.

எஅ. வேறு.

நிம்ப மலர்க்கடி மாலை
புனைந்த நெடுஞ்செ ழியன்துணையே
நிகரறு புகலியர் குரிசி
றனக்குள நெகிழரு ளுடையனையே
கும்ப மதக்கரி யுரியிறை
யடியவர் கட்கொரு கற்பகமே
கடல்புடை சுற்றிய வுலகி
லுயிர்த்தொகை கட்கருள் வைப்பிடமே
வம்பவிழ் தாதகி பைம்பொனின்
முடியணி வளவர்க டவமகளே
மலர்மகள் முதலிய தெரிவையர்
பெறலரும் வளமிகு மெழிலுருவே
அம்பவ ளத்தினி யன்றசெவ்
வொளிமிகு மம்மனை யாடுகவே
அறநெறி தழைதிரு மதுரைய
ரிறைமக ளம்மனை ஆடுகவே.

எகூ. வேறு.

மங்குன் மதிசேர் மாளிகைமேல்
வசந்தன் விளைத்த பெரும்போரின்
மலைத்தோட் கணவ ருடனாடி
மடவா ரிறைத்த பருமணியும்
தெங்கின் பாளை சொரிமலருஞ்
சீக்கு மடவா ரறிவரிய
செல்வக் கூடற் பதிபுரந்த
செல்வி யிதழ்கள் விரிந்துமது

பொங்கும் புதுப்பூங் கமலமிசைப்
பொன்சேர் ந்தாடல் புரிவதெனப்
பொற்புப் பெருகுஞ் செங்கைகொடு
போற்று மடவார் கண்களிப்ப
அங்கண் மயிலே கருணையினு
லாடி யருள்பொன் னம்மானை
அபயன் தருமங் கையரரசே
யாடி யருள்பொன் னம்மானை.

௮௰. பற்பன் மலரி னறுஞ்சுண்ணம்
படிந்த வரிவண் டுடன்முழுதும்
பால்போ னீறு புனையடியார்
படிவங் காட்டிப் பாடிவர
மற்பல் கியபூம் பண்ணைகள்புள்
வாயா லழைத்தின் மொழிபகர
வாழை யிலைபைஞ் சுருள்விரிக்க
மலருங்கைதை சோறளிக்க
விற்பொன் செருந்தி புன்குவெண்பொன்
வீசக் கமுகு மணிமுத்தம்
வெறுக்குந் தனையும் பொழிபாண்டி
வியனு டாளும் பேரரசி
அற்பொங் கியபூங் குழற்றிருவே
யாடி யருள்பொன் னம்மானை
அபயன் தருமங் கையரரசே
யாடி யருள்பொன் னம்மானை

அக. வெள்ளி விலங்கற் பொளிந்தனைய
வியன்மா ளிகையின் பொலன்முடிமேல்
விளங்கும் பிறையும் வானதியும்
மேவிச் சூல மமர்கையினல்
பள்ளக் கடனீர் குடித்துமுதிர்
பருவ முகில்கீழ்ப் பயில்வதனல்
பரம சிவசா ரூபமெனும்
பதவி யுறுவோ ரெழில்காட்டி
யெள்ள லறுபே ரறிஞரெலா
மிதுவே பூமேற் சிவலோக
மென்னும் பழைய மொழிபுதுக்கு
மெழிலார் [illegible] நகர்க்கிறைவி
அள்ளிக் கொளும்பே ரழகுடையா
யாடி யருள்பொன் னம்மானை
அபயன் றருமங் கையரசே
யாடி யருள்பொன் னம்மானை

164042
O-,1S NNG2,M
N41

## கூ. நீராடற்பருவம்.

அஉ. கடம்பொழி கவுட்சிறு விழிக்குஞ் சரக்கொம்பு
கவினிளம் பிறையதாகக்
கண்டவர்க ணெஞ்சஞ்சு வெண்டலைவெ ணுரையாக்
கடுக்கைமிலை தலையுடைத்தாய்ப்
படப்பொலியென் மணியரவு கூர்மமே னக்கோடு
படாகல முடையதாகிப்
படிவமுழு துஞ்சிவந் தெண்டிசைகள் பரவவரு
பான்மையத னுனெமதுள

மடம்பொடி படுத்தறிவின் மன்னியடி யுன்னவருள்
மாறு தளித்தமரர்கோன்
வந்துவழி பாடுசெய்த மைத்தசுடர் மானமிசை
மகரவிழி யோடிருந்த
விடப்பொலி களத்திறைவ னைத்ததிரு வையைநதி
வெள்ளநீ ராடியருளே
வேதநெறி சைவநெறி வாழவரு மாதரசி
வெள்ளநீ ராடியருளே.

அ௯. மாகமுக டார்மலை யுதித்துவா லாலுலகின்
மன்னுயிர் வளர்த்திடுதலால்
வானநதி யோடிகலி யீசனருண் மேனியை
மணத்தலான் மாரனங்கை
யாகுமர விந்தமிள மாவினொடு பிண்டி முத
லாயகணை வேழவில்லு
மந்திரைக்கைக் கொண்டு சுறவுயர்த் திடுதலா
லமாரலர் மலர்கடுவிப்
போகமொடு பாக்கிய நிலாவும்வகை வழிபாடு
புரியவரு டந்தடியந்தம்
புந்தியிலு மறைமுதலு மந்தநடு வும்பெருமை
பொங்குமது ராபுரியிலோர்
மேகமள வுங்கோயி லுங்குடிகொ ளுமையனைய
வெள்ளநீ ராடியருளே
வேதநெறி சைவநெறி வாழவரு மாதரசி
வெள்ளநீ ராடியருளே.

அஈ. புழைக்கைப் பிறைக்கூன் மருப்புத் தழற்கட்
பொருங்களிற் றெருடுதோன் றலாற்
பொருப்புறு கடிக்காந்தள் வேங்கைகுர வகலம்
புரண்டுவா லாலுழையினோர்
மழைக்கட் குறச்சிறுமி மார்குலவி யாடவணி
வவ்வலா னேங்குவன்னி
வந்ததக ருந்தியெண் டிசையார்ப்ப வருதலான்
வானமுக டளவுயர்ந்த
தழைப்பச்சை மாவைத் தடிந்தத்தி நிலைகெடிச்
சயிலத்தி னகடுகீண்டு
தடையேது மில்லாம லுயர்தலான் மயின்முதுகு
தனிலேறி யடிமலர்களே
விழைப்பத்த ருள்ளம்வரு குமாணிகர் வையைநதி
வெள்ளநீ ராடியருளே
வேதநெறி சைவநெறி வாழவரு மாதாசி
வெள்ளநீ ராடியருளே.

அரு. பசுங்கலப மிவர்கடம் பணிகுருந் தோடுவண்
படிமீதி லோடிவாலாற்
பகிரதியு மதியுமள வளவலா லங்குசம்
பாசமுந் தாங்குகையினல்
அசும்புறக் கடமூற் றெழப்பாய்த லாற்பணிக
ளகலம்பு ரண்டுவாலால்
அணிகொள்மா தங்கமுக மேவலான் வெம்மையை
யகற்றிமா சறுவித்தலாற்

றசுப் புறழ் முலைச்சித்தி புத்தியெனு மரிவையர்
　　　　தடந்தோள்க டோயுமைங்கைத்
தந்தியை நிகர்த்துநான் மாடமலி கூடனகர்
　　　　சார்ந்தழகு செய்துளத்தில்
விசும்பவர் வியப்புறப் பெருகிவரு வையைநதி
　　　　வெள்ளநீ ராடியருளே
வேதநெறி சைவநெறி வாழவரு மாதரசி
　　　　வெள்ளநீ ராடியருளே.

அசு. படையேறு விழிமகளிர் அடுசோறு முழுதுண்டு
　　　　பானெய்தயிர் தேன்மடுத்தும்
பாகமமை யாதரிசி காய்கறிகள் பயறெனும்
　　　　பண்டமெல் லாநுகர்ந்தும்
கொடையேது மில்லாது தம்வயிறு தூர்க்கின்ற
　　　　கொடியருறு வதுநிகர்ப்பக்
குடர்கரிய மண்டுபசி கொண்டுவா டுங்குறிய
　　　　குறளுக் கிரங்கியன்னம்
தடையேது மில்லா தெடுக்கும் தொறும்தரும்
　　　　தகைமைசால் குழியமைத்துத்
தந்துபின் கொண்டதா கந்தணிய முடிமேவு
　　　　தண்பகீ ரதியையெண்ணி
விடையேறு பெருமா னழைக்கவரு வையைநதி
　　　　வெள்ளநீ ராடியருளே
வேதநெறி சைவநெறி வாழவரு மாதரசி
　　　　வெள்ளநீ ராடியருளே.

அஎ. வேறு.

பாதி மதியும் படவரவும்
பைம்பொற் கொன்றை நறுந்தொடையும்
பாகீ ரதியும் பொதிந்தகொடிப்
பவளச் சடையா னருளாலே
தீதி னுருவச் சமணர்குழுச்
சேன மீர்ப்பக் கழுவிலுறத்
தெய்வ நீறு தென்னாடர்
திகழு நெற்றித் தலத்திலுறக்
கோதி லடியார் புகழ்சலதி
குலவு புவிமே னிலவலுறக்
குமுத மலர்வாய்ப் பிரமபுரக்
குருந்து மொழிந்த தமிழின்மணம்
போத மணக்கும் வையைநதிப்
புதுநீ ராடி யருளுகவே
பொன்னித் துறைவன் கண்மணியே
புதுநீ ராடி யருளுகவே.

அஅ. உய்யாச் சமயஞ் சாரமண
ருய்த்த வோலை கடலேற
உலையாத் துயரோ டவர்கழுவி
லேறப் பாண்டி நாடர்நுதல்
மெய்யா றளிக்கு நீறேற
வேத நெறியிவ் வுலகேற
வேந்தற் கறிவு தெளிவேற
மெய்யின் கூனு நிமிர்ந்தேற

மையார் சோலைக் கழுமலச்சேய்
வாய்மை யெழுதே டெதிரேற
வையை முழுது மரன்புகழே
மலிய வருளே பெருகிவரும்
பொய்யாத் தமிழ்தேர் வையைநதிப்
புதுநீ ராடி யருளுகவே.

௮௯. நிலவு முடிமேற் புனைந்தபிரா
ணிகரி லருளாற் கடல்குடித்த
நிமல ஞானக் குறுமுனிவன்
நிலமே ணிகாற் றிடவமைத்த
விலகு மியல்சேர் தமிழ்க்கடலை
யியல்பான் முகந்து கவிமாரி
யிம்மா நிலத்தோர் களிதூங்க
வென்றும் பொழிந்து கூடனகர்க்
குலவுஞ் சோம சுந்தரன்றாட்
கொங்கார் கமல முடிக்கணிந்து
குறையாப் புகழும் பாகதியுங்
கொள்ளை கொண்ட திறற்சங்கப்
புலவர் நாவிற் பொருந்துவையைப்
புதுநீ ராடி யருளுகவே
பொன்னித் துறைவன் கண்மணியே
புதுநீ ராடி யருளுகவே.

௯௰. கொங்குண் குழற்குச் சைவலமுட்
குழையக் கருணை பொழிவிழிக்குக்
குலைந்த கயனீ ருட்புகுதக்
கொடிய பவளம் வாய்க்கலையச்

சங்க வினநின் கழுத்தழகு
தமக்கில் லாது வாயரற்றச்
சம்பந் தருக்குப் பால்சுரந்த
தனத்தா லாழிப் புள்ளிரிய
வங்கட் கமல மடிக்கசைய
வன்ன நடைக்குத் தளர்ந்தொதுங்க
வரப்பை யணைய தோழியரோ
டம்மே வுடுக்க ணடுமதிபோற்
பொங்கி வருசெந் தமிழ்வையைப்
புதுநீ ராடி யருளுகவே
பொன்னித் துறைவன் கண்மணியே
புதுநீ ராடி யருளுகவே.

௯௧. நாவு மணக்க வொருகாலே
நவில்வா ருள்ளக் கன்னெகிழ்ந்து
ஞான மணக்க மணிமொழித்தே
னயந்து பொழிந்த மலர்த்திருவாய்த்
தேவு மணக்கும் பிட்டமுது
செய்யத் தருசெம் மனத்தாயுஞ்
செய்த தவத்தின் பெருமைபுவி
தெரிய மணக்கத் தேவர்கடந்
காவு மணக்கும் பூமணக்குங்
கவினார் முடிமேன் மண்மணக்கக்
கடிய பிரம்பி னடிமுதுகு
கன்ற மணந்தார் சேவடிப்பொற்
பூவு மணக்குங் கரைவையைப்
புதுநீ ராடி யருளுகவே

பொன்னின் மணக்கு மடமானீ
புதுநீ ராடி யருளுகவே

## ம. ஊசற்பருவம்.

கூஉ. கலைகள்பதி ஞறுநிறை முழுமதிய மென்னவெள்ளொளி
கால்வயிர மணிகடைந்து
கானிறுவி யதன்மீது கதிரனைய வொளிமணி
கடைந்துவிட் டங்களிட்டு
விலையிதென வறியாத மாற்றுயர் பசும்பொனின்
வியன்பலகை யைப்பருத்த
வெண்டாள வடமெட்டி விட்டுவெண் பட்டினை
விரித்தமுது டன்பிறந்த
மலர்மகளை மொழிமகளை யயிராணி தனைநிகரு
மடமகளிர் குழுமிவாழ்த்தி
வடம்பிடித் தாட்டப் பசுங்கலப மயிலோதி
மத்தேறி யாடுமாபோன்
பொலங்குழைகள் வார்செவியி லாடமங் கையரசி
பொன்னூச லாடியருளே
புகலிவரு தமிழ்விரகர் புகழ்மதுரை நகரிறைவி
பொன்னூச லாடியருளே.

கூங. வான்றங்கு சூன்முகி லினைப்பாற வோங்குபொழின்
மையத் துயர்ந்துதிக்கு
வரையளவு மணம்வீசு சந்தன மரக்கொம்பின்
மாட்டுமணி யூசலேறித்

தேன்றங்கு பணிமொழிசெ வேறங்கு கருவிழிச்
சிலதியர்கள் சிவலோகநேர்
தென்னாடு மங்நாட்டின் முன்னாட்டு மதுரையுஞ்
செழியனு மவன்றேவியாங்
கான்றங்கு பூங்குழலி நீயும்வாழ் கென்றுதங்
கனிவாய் திறந்துவாழ்த்திக்
கடுவிசையி னாலேயு கைப்பக் கருங்கணிரு
காதளவு மாடவூசல்
போன்றங்கு ழைச்செவிகள் தோளுறைதந் தாடவொளிர்
பொன்னூச லாடியருளே
புகலிவரு தமிழ்விரகர் புகழ்மதுரை நகரிறைவி
பொன்னூச லாடியருளே.

கூச. செங்கமல மொருதாளி னீர்நின் றருந்தவசு
செய்துசற் றெய்ப்பானநின்
சேவடி யுதைந்தாட வணிநூ புரங்களொலி
செய்தாட வையவிடையாம்
பைங்கொடி துவண்டாட வதின்மொய்த்த வண்டனைய
பருமணிப் பருமமாடப்
பார்புகழு ஞானசம் பந்தருக் கமுதூறு
படர்கொங்கை யாரமாடச்
சங்கனைய வொண்கள மிலங்குமணி யாடவொளி
தழைபவள வாயரும்புந்
தாளநில வாடவிரு குழைமகர மாடநுதல்
சாற்றுவெண் ணீற்றெழுந்த

பொங்கொளியு மாடமலர் வண்டெழுந் தாடவொளிர்
பொன்னூச லாடியருளே
புகலிவரு தமிழ்விரகர் புகழ்மதுரை நகரிறைவி
பொன்னூச லாடியருளே.

௬௫. அண்டர்க டொழுங்கற்பி னரசியர்க டம்விரத
மசையாமை வேண்டிநெஞ்சா
லநுதினமு நினைகமல மலரனைய வடியிணையு
மணியுமஞ் செஞ்சிலம்பும்
தண்டையு நுணங்கிடை யிலங்குமே கலையுமொளிர்
தரளவட மணிமார்பமுஞ்
சங்கனைய வொண்கள மிலங்குமாங் கலியமுந்
தளவனைய புன்மூரலுந்
துண்டவணி மணியுமருள் பொங்குகயல் விழியுந்
துலங்குகுழை யணிசெவிகளுஞ்
சுந்தரமி குந்ததிரு வெண்ணீற்று நுதலுமளி
துலைதகுழலு மணிபொன்முடியும்
புண்டரிக மலர்முகமு மழகொழுக மடமானி
பொன்னூச லாடியருளே
புகலிவரு தமிழ்விரகர் புகழ்மதுரை நகரிறைவி
பொன்னூச லாடியருளே.

௬௬. கண்ணொளியை மூடுமிரு ளினுமிகக் கரிதாய
கடியமல மாம்பலகையிற்
கண்ணியுறு மிருவினைச் சங்கிலிகள் பூட்டிமேற்
கனநியதி விட்டமாட்டி
மண்ணிநெடு விண்ணாகு தொறும்விசையி னூற்சென்று
மாறுடு மூசலேறி

வறிதாக வலேகின்ற வுயிரெனு மடந்தையை
மணந்தூச னின்றெடுத்துத்
தண்ணளி யினீரூறு நிலேயுங் கடந்தமேற்
றலமேவு மஞ்சமீது
தாபித் திணங்கியொப் பில்லாத வின்பந்
தரும்பசு பதிக்குகந்த
புண்ணிய மிகுங்கற்பு நெறிதழைய வந்தமயில்
பொன்னூச லாடியருளே
புகலிவரு தமிழ்விரகர் புகழ்மதுரை நகரிறைவி
பொன்னூச லாடியருளே.

கூஎ. பொல்லாத சமணிருளில் வளநாடு மதையாண்ட
பூழியனு மூழ்குநாளும்
போர்விடைப் பாகனெறி யேசேர்ந்து நின்னைப்
புரந்துகொண் டனேநின்மகிழ்நன்
ஒல்லாத தீவினேச் செயல்செய்து சுரமேவி
யுடல்பதைத் திட்டநாளில்
உயர்ஞான முண்டமக வின்னருளி னலதை
யொழித்தவனி னுயிர்பேணினே
நல்லாத வற்கண்ட விருளென்ன மன்பதைகண்
ஞானமுற் றமணினீங்க
நயந்தருளி யுயர்புகழ் நிறுத்திஇனசெ நாப்போத
னவில்பெண்ணி னியல்பனைத்தும்
புல்லா விளங்குமங் கையரா சியம்மையொளிர்
பொன்னூச லாடியருளே
புகலிவரு தமிழ்விரகர் புகழ்மதுரை நகரிறைவி
பொன்னூச லாடியருளே.

௬௮. சென்னே ரிருண்டகுழன் மடவியர்கள் மாசுணத்
தின்னூரி நுனிக்கண்மேய
செறிவேய்கண் வளர்வெள்ளி மலையன்ன கொடிமாந்
திகழ்வெள்ளி மாடமீது
தன்னே ரிலாதசெம் மணிகுயின் றொளிர்மேற்
றலத்துவந் தெய்துமதியைத்
தாவிலா வட்டத் தருப்பணமெ னக்கொண்டு
சார்முகிற் றுகிலைநீக்கி
வின்னேர் கரும்புருவ மூங்குவளை யென்விழியும்
விளங்குமுக வழகுநோக்கும்
மிக்கவெழி லுற்றதமிழ் மதுரையம ரிறைவாருள்
மேவியுல குய்யவந்த
பொன்னே யெமக்கினிய வன்னேமின் னொளிநீடு
பொன்னூச லாடியருளே
புகலிவரு தமிழ்விரகர் புகழ்மதுரை நகரிறைவி
பொன்னூச லாடியருளே.

௬௯. எண்ணரிய கலைகளுக் குறையுளா தலினு
லிலங்கியவெண் மலரின்மகளாய்
எச்செல்வ முங்குறை வறப்பொலித லாற்செம்மை
யேய்ந்தமலர் மேவுதிருவாய்
மண்ணுலகி னெண்ணுன் கறங்களும் வளர்த்தலான்
மலையுதவு முமையம்மையாய்
மகளிர்க டமக்குரிய பண்பெலாங் கூடலான்
மங்கையர்க டங்களரசாய்
நண்ணரிய சிவஞான மெங்கட்கும் வாவரு
ணயத்தலி னருட்சத்தியாய்


நடுவுநிலை தவறாத வளவர்மக ளாய்வந்த
நங்கையே திங்கள்மரபோன்
புண்ணிய மளிக்கவரு வாழ்க்கையின் றுணைவியே
பொன்னூச லாடியருளே
புகலிவரு தமிழ்விரகர் புகழ்மதுரை நகரிறைவி
பொன்னூச லாடியருளே.

கய0. கோதிலா மறைமுதல்வ னோங்கார வடிவமுறு
கொன்றையணி நம்பனென்றுங்
கொடியமல விருளகல வருளா லுயிர்க்குடல்
கொடுத்தவ னளிப்பனென்றும்
யாதிலா சையுமின்றி யவனடிகள் மறவா
தகத்துவைப் பதுமாதவ
மாமென்று மன்னுரை வாதியா வினையென்று
மானதரு ளுருவங்களே
தீதிலா வடியவரு மாலயமு முண்மைமொழி
செப்பியருள் குருவுமென்றுந்
தேறியமெ யுணர்வினவர் பேறுருவ மொடுவந்த
செயலென்ன வருதெய்வமே
பூதிசா தனநெறிப் பயிர்தழைய வந்தபுயல்
பொன்னூச லாடியருளே
புகலிவரு தமிழ்விரகர் புகழ்மதுரை நகரிறைவி
பொன்னூச லாடியருளே.

கயக ஆரணம தாமூவர் தமிழ்வாழ வாழமுனி
யருள்கோவை திருவாசகம்
அற்புதத் திருவிசைப் பாக்கள்பல் லாண்டினெடு
மரியமந் திரமும்வாழச்

சீரணவ திருமுகப் பாசுர முதற்கொண்ட
செந்தமிழ்ப் பனுவல்வாழச்
சேக்கிழா ராக்குமெய்த் தொண்டர்சீர் வாழநற்
சித்தாந்த நூல்கள்வாழப்
பாரணவு மன்பனுதைகள் வாழவரு வள்ளுவப்
பயன்வாழ நினதுசெம்பொற்
பாதமல ரெமதுள்ள மெந்நாளு மேவுமொரு
பரிசியாம் பெற்றுவாழப்
பூரண மதிக்குமெழில் மூறுமுக மடமானி
பொன்னுச லாடியருளே
புகலிவரு தமிழ்விரகர் புகழ்மதுரை நகரிறைவி
பொன்னுச லாடியருளே.

மங்கையர்க்கரசியார் மலரடிவாழ்க.



உ

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 4 | 5 | 8 | தருகோத்தமர் | குழுவினுக்கோர்ப்பிலர் |
| 5 | 4 | 11 | பெற்றோர்க்கிரு | பெற்ருற்கிரு |
| 11 | 14 | 6 | செம்பாதியாகிப் | செம்பாதியாகி |
| 30 | 50 | 22 | லெல்லாம் | ரெல்லாம் |
| 56 | 88 ம் செய்யுளீற்றில் | | "பொன்னித்துறைவன் கண்மணியே புதுநீ ராடியருளுகவே" என்பதைக் கூட்டிக்கொள்ளு | |
| 61 | 97 | 19 | மன்பதைகண் | வமஞெழிய |
| 61 | 97 | 20 | றமணினீங்க | றுலகமுய்ய |
| 64 | 101 | 9 | மூறமுக | மீறமுக |

4A
4.50

STAR POWER PRESS
QUALITY PRINTERS & BINDERS
COIMBATORE.